Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 16 புதன்கிழமை (31.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 092

## காணியற்றவர்களுக்கான பிரச்சினை வடமராட்சி கிழக்கில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் காணியற்றவர்களுக்கான பிரச்சினை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆராயப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப்பகுதியில் காணிப்பிரச்சினை தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், 19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் இருவர் அரசுப்பக்கம் தாவல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் இருவர் நேற்று அரசுப்பக்கம் தாவியுள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை உறுப்பினரான நடராசா நிறைஞ்சன் என்பவரும் அவரது மனைவியும் பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினருமான கிருசாந்தி நிறைஞ்சன் ஆகிய இருவருமே இவ்வாறு கூட்டமைப்பில் இருந்து அரசுப்பக்கம் தாவியுள்ளனர்.

நேற்றுக்காலை இவர்கள் இருவரும் அலரிமாளிகையில் அமைச்சர் பசில்ராஜபக்ஷவைச்சந்தித்து தமது நிலைப்பாட்டை நேரடியாகத் தெரிவித்தனர்.

பருத்தித்துறைப் பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்கமாக கருதியே தாம் அரசுப்பக்கம் சாய்ந்ததாக அவர்கள் எமது செய்தியாளரிடம் கருத்துத் தெரிவித்தனர். (01)

# 2015-ல் தீர்வு நிச்சயம் சம்பந்தன் தெரிவிப்பு

## கூட்டமைப்பின் அணுகுமுறை மாறும் என்றும் கோடிகாட்டினார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளருக்கு ஆதரவு அளிக்க உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் வைத்து அறிவித்துள்ளது.

அதேசமயம், அதற்கு முன்னதாக நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில், 2015-ல் நிச்சயம் தமிழ் மக்களுக்குத் தீர்வு வரும் என்று அழுத்தமாகத் தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். முன்புபோல நமது அணுகல்முறை இருக்காது. நாம் முற்றிலும் புதிய முறையில் நடந்துகொள்வோம். இந்தத் தேர்தலின்பின் யார் ஜனாதிபதியாக வந்தாலும் அடுத்த ஆண்டில் தீர்வு கிடைப்பது உறுதி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில், தங்களது ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான நிலைப்பாடு குறித்த அறிக்கையை வெளியிட்டுப்



பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு [illegible] சிறிசேனவை ஆத[illegible] அறிவித்தார்.

[illegible]திலிருந்து நமது நாட்டையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றுவதற்காகவும், நமது உன்னத விழுமியங்களான சமத்துவம், நீதி, தன்மானம், சுதந்திரம் எண்பவற்றை மீளப் பெறு

19 ஆம் பக்கம் பார்க்க

## யார் எதைத் தந்தாலும் பெற்றுக்கொள்ளுங்கள்


### உங்கள் வாக்குகளை எனக்குத் தாருங்கள் யாழ்ப்பாணத்தில் மைத்திரி கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

எந்தக் கட்சி என்ன தந்தாலும் வாங்கிக்கொள்ளுங்கள், ஆனால் 8 ஆம் திகதி எனக்கு வாக்குகளை அளியுங்கள் என எதிரணியின் ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க




## நீதியான முறையில் தேர்தல் நடக்கும்



### பான் கீ மூன் நம்பிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலாக நடைபெறுமென தான் எதிர்பார்ப்பதாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸூடன் கடந்த வாரம தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்ட மூன், இலங்கையின் நல்லிணக்கத்துக்கு ஐக்கிய நாடுகள் 19 ஆம் பக்கம் பார்க்க

# வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : எஸ். தருண்,

முகவரி : கல்வயல், சாவகச்சேரி.

அகவை 5 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# வறுமையென்பது தீவகத்தில் அடியோடு அழிய வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் உதயன் எம்.பி. தெரிவிப்பு

(தீவகம்)

தீவக மக்கள் மத்தியிலிருந்து வறுமை அடியோடு அழியவேண்டும் ஒவ்வொரு குடும்பத்தினரும் தன்னிறைவுப் பொருளாதாரத்தினை கொண்டிருக்க வேண்டும். தீவகப்பிரதேசத்திலுள்ள வளங்களினைச் சரியான முறையில் பயன்படுத்துவதனூடாகவும் மக்கள் முழுமையான முயற்சியையும் வினைத்திறனையும் வெளிப்படுத்துவதனூடாக ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் வறுமையெனும் பிணியினை முற்றாக ஒழிக்க முடியும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தீவக ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் வழங்கப்படும் வாழ்வாதாரத உதவித்திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்தி தங்கள் குடும்பத்தின் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

மேலும் தீவக மக்களின் நலன்களில் அதிக அக்கறையும், கரிசனையும் கொண்டதுடன் தீவக மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அவர்களின் வாழ்க்கை முறையினை செழித்தோங்க வைத்தவர் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ. வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் எமது தமிழ்மக்கள், வடபிரதேசத்தினை அபிவிருத்தி பணியில் இட்டுச்சென்ற ஜனாதிபதியின் வெற்றியில் பங்காளிகளாக விளங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.



# எயிட்ஸ் நோயாளிகளுக்கு நிவாரணப் பொதிகள்




(யாழ்ப்பாணம்)

உலக எயிட்ஸ் தினத்தினை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையினால் யாழ்.மாவட்டத்தில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட 25 நோயாளிகளுக்கு உலர் உணவு அல்லாத நிவாரணப் பொதிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் எயிட்ஸ் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி.குருபரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் ஆகியோரால் கையளிக்கப்பட்டது. (ப)

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **1122** | திகதி **29.12.2014**

வெற்றி எண்கள்: **09 38 49 58** | ஆங்கில எழுத்து: **Z**

**ஜக்பொட் பரிசு ரூ. 4,84,18,180/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,84,18,180/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 50,000/= | ரூ. 8,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 245 | 1,000/= | ரூ. 2,45,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 457 | 1,000/= | ரூ. 4,57,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11281 | 60/= | ரூ. 6,76,860/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5949 | 40/= | ரூ. 2,37,960/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 148778 | 20/= | ரூ. 29,75,560/= |
| ஆங்கில எழுத்து | 21554 | 20/= | ரூ. 4,31,080/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 68,73,460/=

**எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 48,709,060/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.01.01 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3916)

## புங்குடுதீவில் டெங்கு

இரு நாட்களில் புங்குடுதீவிலிருந்து 5 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களில் புங்குடுதீவு 4 ஆம், 6 ஆம் வட்டாரங்களிலிருந்து 5 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டனர்.

கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனாவில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் டெங்கு நோயின் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திகதி அறிவிக்கப்படும்

வடமாகாண ஆளுநர் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டி மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் வடமாகரண ஆளுநரின் உதவிச் செயலாளர் எஸ்.அண்ணாதுரை அறிவித்துள்ளார். (137)

## விபத்தில் வயோதிப மாது காயம்

யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். நேற்றுக்காலை வைத்தியசாலை வீதிச் சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் குருநகரைச் சேர்ந்த கே.மார்க்கிறேட்டம்மா (வயது-65) என்ற வயோதிபப் பெண்ணே படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் வந்த பேருந்து மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டதுடன். இவ்விபத்துக் குறித்து யாழ். போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

## அஞ்சலிக் கூட்டம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி கனடாவில் காலமாகியுள்ள நிலையில் அவரை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் மணிசேகரகம் அறிவித்துள்ளார். (93)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

**றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி. யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088.

(C/3800)

# பனை மரங்கள் அழிக்கப்படுவதால் உற்பத்திப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

## பசுபதி சீவரெட்ணம் கவலை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்ததினால் பனைமரங்கள் அழிக்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது பல்வேறு தேவைகளுக்காகவும் அனுமதியின்றி பனைமரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. இதனால் யாழ். குடாநாட்டுப் பகுதியில் பல்கிப் பெருகிக் காணப்பட்ட பனை உற்பத்திப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் பசுபதி சீவரெட்ணம் தெரிவித்துள்ளார்.

மேலும் பனை மரங்கள் அதிகளவில் அழிக்கப்பட்டுவருவதால் யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் பனம் விதையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் உற்பத்தியும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

அதுமட்டுமன்றி தற்போது புழுக் கொடியல் 400 ரூபாவுக்கு அதிகமாகவும், ஒடியல் 350 ரூபாவுக்கு அதிகமாகவும், சீவிய புளுக்கொடியல் 600 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றன. மேலும் தற்போது பனை அபிவிருத்திச் சபையின் கொள்வனவு விற்பனையை விட தனியார் துறையின் விற்பனையும் கொள்வனவுமே அதிகரித்துக் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பனை மரங்கள் அழிக்கப்பட்டு வரும் நிலையில் பனம் உணவுப் பொருட்களின் விலைகளும் எதிர்காலத்தில் மேலும் பலமடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தங்களுடைய வளம் மற்றும் பொருளாதாரத்தைக் கருத்திற் கொண்டு பனை மரங்களை அழிப்பதை நிறுத்த வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அது மட்டுமன்றி பனை வளங்களை அழிப்பதை நிறுத்துவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு குறைவாககாணப்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

# பற்றி எரிந்தது லொறி



சங்கானை சந்தைக்கு அண்மையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 9.45 மணியளவில் முற்றாக எரிந்து நாசமாகியது. கொப்பறா தேங்காய்களை ஏற்றியவாறு நின்ற லொறியே இவ்வாறு தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்துக் குறித்து உடனடியாக யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. விரைந்து செயற்பட்ட தீயணைப்புப் பிரிவினர் அரை மணி நேரத்துக்குள் அங்கு வந்து தீயை அணைக்க முயற்சித்தனர்.

ஒரு பவுசர் தண்ணீர் அடிக்கப்பட்டு தீயை அணைக்க முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. இதனால் லொறி முற்றாக எரிந்து நாச மானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்து லொறி உரிமையாளர் வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் லொறி தீப்பற்றி யமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

# மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் 60 ஆவது ஆண்டு மணிவாசகர்விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஈழத்துச்சிதம்பர வசந்த மண்டபத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர் தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைப்பார்.

இவ்விழாவில் ஈழத்து அறிஞர்கள் பலரது சொற்பொழிவுகளும் மாணிக்கவாசகர்சபை நடாத்திய போட்டிகளில் முதலிடம் பெற்றோரின் நிகழ்வுகளும், காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்களின் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

முதலாம் நாள் விழாவில் சைவ சமயபாடப் பரீட்சையில் அதிவிசேட சித்திபெற்ற மாணவர்கள் ஐவருக்கு தங்கப்பதக்கமும், வகுப்பு ரீதியாக முதல் ஐந்து மாணவர்களுக்கு புத்தகப்பரிசிலும் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (10)



காங்கேசன்துறைக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கான பெயர்ப்பலகை பொருத்தப்பட்டு வர்ணம் பூசப்படுவதைக் காணலாம். (படம்: எஸ். நிருஜன்)

# அமெரிக்க விருப்பத்திற்கு எடுபடுவதுதான் ஜனநாயக மாற்றத்தைக் கொண்டுவருதலா?



வடபுலத்தான் எழுதுவது...

புலிகளை அழித்த சரவதேசம்தான் இப்பொழுது மகிந்த ராஜபக்ஷவையும் ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு முயற்சிக்கிறது.

இது ஒன்றும் ரகசியமான விடயம் அல்ல.

அப்பொழுதும் இப்பொழுதும் வெளிச்சக்திகளுக்கு ஆதரவளித்த தமிழ்த்தலைமைகள் – தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் – இப்பொழுதும் இதற்கு ஒத்துழைக்கின்றன.

இதுதான் வரலாற்றின் துயரமும் வெட்கக்கேடுமாகும்.

அப்பொழுது பிரபாகரனை ஒழிப்பதற்காக மகிந்த ராஜபக்ஷவைப் பயன்படுத்திய இதே வல்லரசுகள், மகிந்த ராஜபக்ஷவை அகற்றுவதற்காக மைத்திரியைப் பயன்படுத்துகின்றன.

இது ஒன்றும் புதிய விசயம் அல்ல. வரலாற்றில் இப்படித்தான் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

மற்றவர்கள் கையாளக் கடினமானவர் பிரபாகரன்.

மகிந்த ராஜபக்ஷவும் அப்படியான ஒருவரே.

பிரபாகரனை வளைத்து அவருடைய இடுப்பில் இருக்கும் துப்பாக்கியையும் அவர் அணிந்திருக்கும் புலிச் சீருடையையும் களைந்து, வெள்ளைச் சட்டை போட்டு மிதவாத – ஜனநாயக – அரசியலுக்குப் பயிற்றுவிக்க முயற்சித்தது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம்.

ஆனால், புலி புல்லைத்தின்னாது என்று பிடிவாதமாகவே மறுத்து விட்டார் பிரபாகரன்.

பிரபாகரனுடைய மேற்கு நாட்டுப் பிரதிநிதிகள் எவ்வளவோ வாதாடியும் அவர் தன்னுடைய பிடியைக் கைவிடத் தயாராக இருக்கவில்லை.

அதனால் மேற்குலகம் அவரைக் களத்திலிருந்து அகற்ற முனைந்தது.

அதைப்போல மகிந்த ராஜபக்ஷவும் இலங்கையை மேற்கின் ஈர்ப்பிலிருந்து மீட்டு, ஆசிய மையக் கூட்டில் சீனாவின் ஆதரவோடு ஒரு சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கிறார்.

மேற்கின் ஈர்ப்பு விசைக்கும் அதன் நலனுக்கும் அவர் நெகிழ்ந்து கொடுக்க விரும்பவில்லை.

ஆனால் அமெரிக்கா இதை லேசில் விட்டு விடுமா?

எத்தனை தடவை தோற்றாலும் சற்றும் சலிக்காத விக்கிரமாதித்தனாக – மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்துவதற்கு அது தொடர்ந்து முயற்சித்துக் கொண்டேயிருக்கிறது.

அதற்காகவே அது கடந்த தடவை நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவைக் களமிறக்கியது. அதற்காகவே அது சரத்துக்கும் அந்த அணிக்கும் தாராளமாகப் பணத்தை அள்ளிக் கொட்டியது.

ஆனால், அந்தத் தேர்தலில் அமெரிக்கா தோற்றது. இலங்கை மக்கள் விழிப்பாக இருந்து தங்களின் தெரிவாக மகிந்த ராஜபக்ஷவைத் தேர்ந்தனர்.

பிரபாகரனைப்போல நினைத்த மாத்திரத்தில் இந்த அணியினால் மகிந்தவைத் தோற்கடிக்க முடியவில்லை.

ஆனாலும் அது சும்மா இருந்து விடுமா?

இதோ இந்தத் தடவை மீண்டும் அது கடுமையாக முயற்சிக்கிறது.

இதற்காக அது தேர்தல் கண்காணிப்பாளர்கள் முதல் ஊடகங்கள், தொண்டு அமைப்புகள், அரசியற் கட்சிகள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள், நிறுவனங்கள் என்று பல தரப்பையும் வாங்கியிருக்கிறது. அல்லது அவற்றுக்கிடையில் ஊடுருவியிருக்கிறது.

இதற்கு முதலே அது தனக்கு இசைவாகச் சிந்திக்கக் கூடிய மாதிரியான கல்வி முறையையும் ஊடகச் சிந்தனை முறையையும் உருவாக்கி விட்டது.

மாற்றம், ஜனநாயகம் என்று சிந்திப்போரின் உலகமும் உளவியலும் இந்த அடிப்படையிலானதே.

எந்த நாட்டிலும் உறுதியான – ஆளுமை உள்ள தலைவர்களை அமெரிக்கா அனுமதிக்காது.

இதுதான் அமெரிக்காவின் உலக அரசியல் நெறி.

இதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு.

இதுதான் அமெரிக்காவின் கொள்கை.

இதுதான் அமெரிக்காவின் ஜனநாயகம்.

தனக்குச் சேவகம் செய்யக் கூடிய, தன்னை அனுசரிக்கக் கூடிய பொம்மைத் தலைவர்களையே அது விரும்புகிறது.

இது இன்று நேற்று ஏற்பட்ட அமெரிக்க விருப்பமோ, அமெரிக்க நிலைப்பாடோ, அமெரிக்கக் கொள்கையோ அல்ல.

கடந்த பல ஆண்டுகளாக தென் அமெரிக்க நாடுகளிலும் அரபு நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் இதைச் செய்து வருகிறது அமெரிக்கா.

இந்த நாடுகளில் ஆளுமை மிக்க தலைவர்கள், தமது நாட்டின் சுய நிலைப்பாட்டுடன் செயற்பட்டால் அவர்களை அழித்து விடும் அமெரிக்கா.

இதற்கு எடுபடுவதுதான் விடுதலையா? அதுதான் ஜனநாயக அரசியலா?

நம்பிக்கையுடன் இருக்கும்போது எந்தக் காரியமும் கடினமாகத் தெரிவது இல்லை. - ஜோன்ரேட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எப்போதுதான் நாம் மாறுவோம்?

2014உம் விடைபெற்றுச் செல்கிறது.

பழையன கழிய புதியன புகுவது காலவகையினது தான் என்றார்கள். நாங்கள் பழையனவற்றிலிருந்து விடுபட்டு புதிய வழிவகைகளைக் காண முயல்கிறோமா என்று நம்மைக் கேட்டுப்பார்க்க வேண்டும்.

எங்கள் சிந்தனையில் ஏதாவது புதிய மாற்றம் வந்திருக்கிறதா? எங்களை நாம் மாற்றிக்கொள்ளக் கொஞ்சமாவது முயற்சித்திருக்கிறோமா?

மக்கள் தாம் விரும்புவதைக் கனவுகண்டு கொண்டிருப்பார்களே தவிர, யதார்த்தத்தில் நமக்கு எது கிடைக்கப்போகிறது என்பதைச் சிந்திக்க மாட்டார்கள்; அந்த எண்ணம் அவர்களுக்கு உவப்பானதல்ல.

தலைவர்கள்தான் நடைமுறைச் சாத்தியமானதை அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய கடப்பாடு கொண்டவர்கள். அவர்கள் நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் சொல்வது, மக்கள் விரும்பியதற்கு மாறான கசப்புத் தன்மையைக் கொண்டிருந்தாலும், அதுதான் மருந்து, அதுதான் மக்களது ஆரோக்கியத்திற்குத் தேவையானது என்பதை தலைவர்கள் எனப்படுவோர் தான் மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.

அதேபோன்று ஊடகங்களும் இனவாத நிலைப்பட்டுநின்று எங்கள் தரப்பினரது தவறுகளைச் சுட்டிக்காட்டினால் எதிரிக்கு சாதகமாகப் போய்விடுமே என்ற கண்ணோட்டத்திலேயே, இப்போதும் உண்மைகளை மறைத்து வெறும் உசுப்பேத்தல் செய்திகளை அளித்துக்கொண்டிருக்கக் கூடாது.

மக்களுக்குச் சொல்லப்பட வேண்டிய செய்திகள், பொது அரங்கில் விவாதிக்கப்பட வேண்டிய தீர்மானங்கள், தமிழ்த் தலைவர்களுக்கும் நாட்டுத் தலைவர்களுக்குமிடையிலான தொடர்பாடல்கள் எல்லாம் மக்களுக்கு மறைக்கப்படாமல் சொல்லப்பட்டுள்ளனவா என்று ஊடகங்கள் தங்கள் மனசாட்சியைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

மக்களுக்கு யதார்த்தத்தை உணர்த்துவதும், அவர்களுக்கு உவப்பாக இல்லாதது ஆனாலும் நடைமுறைக்குச் சாத்தியமானதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டியதும் ஊடகங்களது தலையாய கடமைகளில் அடங்குவது.

ஊடகங்களைக் கையாளுவோரும், விஷயமறிந்த பிரமுகர்கள் புத்திஜீவிகள் சமூகக் கரிசனையாளர்களும் – கடந்த காலக் கனவுகளுக்கும் நிகழ்காலத் தேவைகள் யதார்த்தங்களுக்கும் இடையிலான புரிதலை சமூகத்தின் முன் வைக்க வேண்டும்.

நடக்க முடியாதென்று மனதுக்குத் தெரிந்த விடயங்களை மாய மான் காட்டுவது போலக் காட்டி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கக் கூடாது. அவ்வாறு நடக்காததைக் காட்டி ஏமாற்றும் போலி அரசியலையே நாம் சுயலாப அரசியல் என்கிறோம்.

அரசாங்கத்திடம் பேசி எந்தத் தீர்வும் எடுக்க முடியாது என்று சொல்பவர்கள், சர்வதேசத்திடம் பேசி இதுவரை எந்தத் தீர்வுக்கான இணக்கத்தைச் சாதிக்க முடிந்தது என்பதை வெளிப்படையாக மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அல்லது, எந்த மாதிரியான ஒரு தீர்வை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளும் என்று இவர்கள் கருதிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையாவது மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

இந்த நாட்டில் ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கங்களும் சரிவராது என்றால் இத்தறுதிக்கு சர்வதேசத்தைக் கொண்டு செய்யக் கூடியதையாவது பகிரங்கப்படுத்தியிருக்க வேண்டும்.

மக்களை உசுப்பேத்தி விட்டுக் கொண்டிருப்பதானது, பழையபடி ஆயுதப்போராட்டம் தான் வழி என்று இளைஞர்களைத் தூண்டிவிட்டுப் பதுங்கிவிடும் பழைய வஞ்சக வரலாற்றை தொடர்வதாகவே அர்த்தப்படும்.

நாளை மற்றொரு புதுவருடம். கடந்ததை இப்போது திருத்திக் கொள்ள இயலாது. வரும் நாட்களை என்ன செய்வோம்? நம்மைத் திருத்திக் கொள்வோமா என்பதே, வரும் ஆண்டின் தொடக்கத்திலும் எம்முன்னால் நிற்கின்ற கேள்வி. - ஆசிரியர்

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அனைவருக்கும் சமனான வாய்ப்பு

## பொதுநலவாய செயலர் வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின்போது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா. அத்துடன் நம்பகத்தன்மை மிக்க அமைதியான தேர்தலுக்கான சட்டங்களை, விதிமுறைகளைப் பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளரின் அழைப்பின்பேரில் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கவுள்ள பொதுநலவாய குழுவிற்கு கயானாவின் முன்னாள் ஜனாதிபதி கலாநிதி பரத் ஜக்டோ தலைமை தாங்குவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொதுநலவாய அமைப்பில் இடம்பெறுள்ள நாடுகள், சர்வதேச தேர்தல் கண்காணிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப பின்பற்றவேண்டும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், நாடொன்றின் மக்களுக்கு சொந்தமான இறைமையை வெளிப்படுத்துவையே நேர்மையான தேர்தல்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாயத்தின் பழமையான ஜனநாயக பாரம்பரியத்தை கொண்ட நாடு இலங்கை, அந்த நாட்டின் மக்கள் தங்கள் வாக்குகளை, வெளிப்படைத்தன்மை, சமவாய்ப்புகள், சட்டம் மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்படும் சூழலில் செலுத்தவேண்டும். பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு தேர்தலுக்கு முநதயை நிலைகளை கண்காணிக்கும், தேர்தல் வாக்களிப்பு தினமன்றும் அதன் பின்னரும் வாக்களிப்பு முறை, வாக்குகள் எண்ணப்படும் முறை மற்றும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் விதம் ஆகியவற்றையும் கண்காணிக்கும் குறிப்பிட்ட குழு பக்கச சார்பற்ற விதத்தில் சுதந்திரமாக மதிப்பீடுகளை மேற்கொள்ளும்.

குறிப்பிட்ட குழு தனது மதிப்பீடுகளை பொதுநலவாய செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கும். அவர்கள் அதனை இலங்கை அரசாங்கம், தேர்தல்கள் ஆணையகம், அரசியல்கட்சிகளிடம் சமர்ப்பித்த பின்னர், பொதுநலவாய அரசாங்கங்களிடம் கையளிப்பார்கள் பின்னர் அது பகிரங்கப்படுத்தப்படும். பொதுநலவாய குழுவைச் சேர்ந்த ஒன்பது பேர் ஜனவரி 2 ஆம் திகதியிலிருந்து இலங்கையில் பணியாற்றுவர். எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இரகசிய இலக்கத்தின் ஊடாகவே ஊடகங்களுக்கு தேர்தல் முடிவுகள்

## தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

இம்முறை அரசாங்கத் தகவல் திணைக்களத்தினூடாக தேர்தல் முடிவுகள் ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதில்லையெனவும், ஊடக நிறுவனங்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் இரகசிய இலக்கத்தின் வாயிலாக உடனுக்குடன் முடிவுகளைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம். முஹம்மட் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தினூடாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல்களின் முடிவுகள் வெளிவராது என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்திருந்தார். இதற்கான மாற்று ஏற்பாடு குறித்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த காலங்களில் தேர்தல் திணைக்களத்தின் முடிவுகளை ஊடகங்களுக்கு அறிவிப்பதற்கான ஒரு வழிமுறையாக அரசாங்கத் தகவல் திணைக்களம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால், பல்வேறு சிக்கல்கள் உள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இம்முறை தேர்தல் முடிவுகள் முதலில் தேர்தலகள் திணைக்களத்தின் கணனி முறைமைக்குஉட்படுத்தப்படும். முடிவுகளைப் பெற விரும்பும் நிறுவனங்கள் குறிப்பிட்ட ஒரு தொகை கொடுப்பனவை திணைக்களத்துக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் நிறுவனங்களுக்கு திணைக்களம் ஒரு இரகசிய இலக்கமொன்றை வழங்கும். அதனூடாக இந்த முடிவுகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த முறைமையின் மூலம் ஊடக நிறுவனங்களுக்கு மிகக் குறைந்த நேரத்தில் பெறுபேறுகள் கிடைக்கக் கூடிய அவகாசம் இருக்கின்றது எனவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

# போதையில் வாகனம் செலுத்திய 600 சாரதிகள் சிக்கினர்

(கொழும்பு)

மதுபோதையில் வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் கடந்த ஐந்து நாட்களில் 660 சாரதிகளை கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 6 மணி வரையான 24 மணித்தியாலங்களுக்குள் வாகன சாரதிகள் 125 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குடி போதையில் வாகனத்தை செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் விசேட வேலைத்திட்டம், கடந்த 24 ஆம் திகதி காலை 6 மணி முதல் நாட்டின் சகல பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சாரதிகளில், லொறி சாரதிகள் 20 பேர், தனியார் பஸ் சாரதிகள் 5, வான் சாரதிகள் 20, கார் சாரதிகள் 43, முச்சக்கரவண்டி சாரதிகள் 227, மோட்டார் சைக்கிள் சாரதிகள் 335 மற்றும் ஏனைய் வாகன சாரதிகள் 10 பேர் அடங்குவதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களின் சாரதிகள் எவரும் குடிபோதையில் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸ தலைமையகம் அறிவித்தது.

# அரசியல் நடவடிக்கைகளில் அரச உத்தியோகத்தர்கள்

## தேர்தல்கள் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் சம்பவங்கள், தொடர்பில் இதுவரை 148 முறைப்பாடுகள் கிடைத்துள்ள தாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.


இதனைத்தவிர, அரச உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் மற்றும் பதவியுயர்வு தொடர்பில் 60 முறைப்பாடுகள் தேர்தல்கள் செயலகத்திற்கு பதிவாகியுள்ளன.


தேர்தலுடன் தொடர்புடைய 752 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றில் 78 முறைப்பாடுகள் பாரிய சம்பவங்கள் தொடர்பானவை எனத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

**நடிகர் வடிவேலு பட நகைச்சுவை போல, "வரும் ஆனால் வராது" என்று மாவையாரின் அகிம்சைப் போர் அறிவிப்பைக் கிண்டல் பண்ணுகிறவர்களுக்கு, தான் அப்படியல்ல என்று காட்டித் தங்கள் வயிற்றில் பாலை வார்ப்பார் தலைவர் என்று மாவையாரின் தொண்டர்கள் நாளைய தினத்தைப் பார்த்திருக்கிறார்கள்.**




தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இந்தப் புது வருடத்துடன் தமிழ்ப் பிரதேசமெங்கும் அகிம்சைப் போர் வெடிக்கும் என்று குறிப்பிட்டிருந்தார். இப்போர் எங்கெங்கு எப்படியெப்படி வெடிக்கும் என்ற விடயங்களை அவர் வெளிப்படுத்தாத போதிலும், தற்போது அவர்களது கட்சிக்குள்ளேயே குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்குள் அகிம்சைப் போர் மட்டுமல்ல, வன்முறைப் போர்களும் வெடிப்பதற்கு வாய்ப்புக்கள் வலுவாகத் தோன்றியுள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைமையில் உள்ளவர்கள் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி ஆளும் கட்சியிடமும் எதிரணிக் கூட்டுக் குழுவிடமும் பெருந்தொகையான நிதியைப் பணமாகவும் வேறு சொத்துக்களாகவும் வாங்கிக் கொண்டதாகவும் இவற்றைப் பங்கீடு செய்வதில் பெரும் பிணக்குகளும் பிரச்சினைகளும் உருவாகத் தொடங்கியுள்ளதாகவும் இவை மாவையின் அகிம்சைப் போருக்கு முன்னர் சில வேளைகளில் பெரும் போராக வெடித்துவிடுமோ என்ற அச்சம் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டிருப்பதாகவும் அறியமுடிகின்றது.

இந்தப் பணப்பரிமாற்றங்கள் தொடர்பில் புளொட் தலைவர் சித்தார்த்தனும் ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தமிழரசுக் கட்சியினர் மீது குறிப்பாக சுமந்திரன் எம்பி மீது பாய்ந்து குதறுமளவுக்கு கடுஞ்சினத்தில் உள்ளதாக அறியமுடிகின்றது.

மரியாதையாக இராது; எனவே வாக்குறுதியளித்தபடி அகிம்சைப் போரை கட்டாயம் நடத்துங்கள் என்று தொண்டர்கள் மாவையிடம் வலியுறுத்தி வருவதாக மாவையாருக்கு நெருங்கிய வட்டாரங்கள் அளிக்கும் தகவல்களிலிருந்து தெரியவருகிறது. ஆனால் மாவையாரோ எட்டாம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மார்ச்சில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைக் கூட்டத்தையும் அவதானித்தே அகிம்சைப் போரைத் தொடங்க வேண்டும் என்ற காலமாற்றத் தேவையை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று சில தொண்டர்களுக்கு பதிலளித்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்தத் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வென்றால், அவர் கேட்கும்

போயுள்ளனர்.

'தமிழ் மக்களாகிய நாங்கள் தூங்கி விடக் கூடாது; எமது இலக்கை நோக்கி நகரவேண்டியது அவசியமாகும். நாங்கள் பாண்டவர்களைப் போன்றவர்கள். தோல்விகளுக்குப் பிறகும் எங்களால் வெற்றி பெற முடியும். தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் எமது பிரதேசங்களில் எந்த ஒரு

நாங்கள் தோற்றுப் போனவர்கள் அல்ல; வேறு வழிகளில் எமக்குத் தீர்வு வராது. இன்று நாங்கள் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அகிம்சைப் போராட்டம் எப்போதும் தோற்றுப் போனதில்லை..."

என்றவாறெல்லாம் மாவை சேனாதிராஜா முழங்கிய உணர்ச்சிகரப் பிரகடனத்தின் ஒலிப்பதிவை அவரது தீவிர தொண்டர்கள் இப்போதும் கைவசம் வைத்திருக்கிறார்கள். உண்ணாவிரத சத்தியாக்கிரக மேடைகளில் அந்தத் தமிழ் முழக்கங்களை ஒலிக்க விடுவதற்கான ஆயத்தங்களில் அவர்கள் மும்முரமாக உள்ளார்கள்.

இருந்தபோதிலும் மாவையாரின் இன்றைய செயல்களிலும் வரும் பத்திரிகைச் செய்திகளிலும் அவர்கள் குழம்பிப் போயுள்ளார்கள். தொடராக நடத்தப்பட வேண்டிய அகிம்சைப் போருக்கான அடுக்குகள் எவ்வளவோ செய்யவேண்டி உள்ளன.

# மாவையின் அகிம்சைப் போர் நாளை வெடிக்குமா?

**"நாங்கள் தோற்றுப் போனவர்கள் அல்ல; வேறு வழிகளில் எமக்குத் தீர்வு வராது. இன்று நாங்கள் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அகிம்சைப் போராட்டம் எப்போதும் தோற்றுப் போனதில்லை..."**

**வே. அர்ச்சுணன்**

தனக்கு ஐந்து கோடியில் வீடு வாங்கியதோ அல்லது பெட்டியில் கோடி கோடியாகப் பணம் வாங்கியதோ கூடப் பரவாயில்லை... ஆனால், அது எப்படி எங்களைக் கலந்துகொள்ளாமல் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுத்தருவதாக எதிரணித் தலைவர்களிடம் இவர் தனிப்பட்ட வாக்குறுதிகளை வழங்கலாம் என்று அவர்கள் குமுறுகிறார்கள்.

எப்படியோ எந்த சவால்களையும் சமாளித்துக் கொண்டு அடுத்த கட்டம் தொடர்பில் முடிவெடுப்போம் என்று மாவை இவர்களை அலட்சியப்படுத்திய வகையில் தனது கட்சித் தொண்டர்களிடம் கூறியதாக சொல்லப்படுகிறது.

ஆனால் மாவையார் அடிக்கடி தமிழ் மக்களை அந்தப் போராட்டம் இந்தப் போராட்டம் என்று உசுப்பேத்தி அரசியல் செய்தல் போன்று இம்முறையும் தனது மூன்று மாத காலக்கெடு... அது முடிய அகிம்சைப் போராட்டம் என்ற சத்தியப் பிரகடனங்களையெல்லாம் போகடிபோக்காக விட்டுவிடுவார் என்றே பலரும் சொல்கிறார்கள்.

மக்களை ஏமாற்றுகின்ற குற்ற உணர்ச்சிகூட அவரிடம் இருக்காது என்ற கருத்தே பலரிடம் இருக்கின்றபோதிலும் அவரின் தொண்டர்கள் இம்முறை அவரை விடுவார்கள் போல் இல்லை என்றும் கூறப்படுகிறது.

அதாவது தமிழ் மக்களது தீர்வுக்கான இந்தப் போராட்டத்தை சொன்னபடி நடத்தாவிட்டால் தொடர்ந்தும் மக்கள் எங்களை நம்ப மாட்டார்கள்; உங்களுடன் நாங்கள் நிற்பது எங்களுக்கு

அந்த நூறு நாட்களையும் கொடுத்துப் பார்த்து, அதன்பிறகு எங்கள் எதிர்ப்பை வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர் தொண்டர்களுக்கு கோடி காட்டியிருப்பதாக கூறப்படுகிறது.

தலைவர் இன்னுமா மைத்திரியை நம்பிக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்.... எந்த அரசையும் இனி நம்புவதற்கில்லை அகிம்சைப் போராட்டத்தின் மூலமே தீர்வு.... அதில் எந்த மாற்றமுமில்லை என்றெல்லாம் முழங்கினாரே....! மக்களுக்கு நாளைக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தொண்டர்கள் குழம்பிப் போயுள்ளார்கள்.

தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா இரண்டு மாதங்களுக்கு முன்னர் பல தடவைகளில் அறுத்துறுத்து மேடைகளில் முழங்கியதையெல்லாம் தொண்டர்கள் நினைத்து நினைத்துப் பார்த்து கலங்கிப்

வெற்றியினையும் பெற முடியாமல் போனது உண்மை....'

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி காங்கேசன்துறைக் கிளையினால் வழங்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் கூறினார். அங்கு மேலும் முழங்கிய மாவை -

"சில நாட்களுக்கு முன்னர் ஒரு நாட்டின் தூதுவர் என்னோடு தனியாகப் பேசினார். உள்நாட்டு பிரச்சினைகளில் எங்கள் தலையீடுகள் இருப்பதை இலங்கை அரசு விரும்பவில்லை என எனக்கு கூறினார். இன்று எனக்கு போடப்படும் மாலைகளும் பொன்னாடைகளும் எம்மை மேலும் போராட வேண்டும் என்றே தூண்டுகின்றன. போராடுவதற்கான தூண்டுதல்களாகவே அவை அமைகின்றன. எமது சிறு பிள்ளைகளை மீண்டும் ஆயதப் போராட்டத்திற்கு செல்லும் நிலைமைக்கு செல்ல விடாது நாம் இந்த அகிம்சைப் போராட்டத்தை நடாத்தி அவர்களை நல்ல முறையில் வாழ வழி செய்ய வேண்டியது அவசியமாகும்....

எமக்கு கிடைக்கப் போகும் தனியரசு எமது மண்ணில் தான் கிடைக்க வேண்டும். மொழியை இழந்து மண்ணை இழந்து வேறு எங்கும் செல்ல முடியாது. எமது மண்ணை இராணுவம் ஆளுகின்றது. இராணுவத்தினரின் உல்லாச வாழ்க்கைக்காக இதனை நாம் அங்கீகரிக்க முடியாது. இதனைத் தடுக்க வேண்டியது எமது கடமையாகும்....

இந்தவேளையில் மைத்திரியை வெல்லவைப்பதற்கு வாங்கிய பணத்தைப் பங்கீடு செய்வதிலும், அதனால் கூட்டமைப்புக் கட்சிகளிடையே எழும் சிக்கல்களைத் தீர்ப்பது தொடர்பிலும் தனது பொன்னான நேரத்தைச் செலவிட்டு வருகின்றாரே என்று தொண்டர்கள் விசனமடைந்துள்ளார்கள்.

சிறைகளுக்கும் அதிகார மிரட்டல்களுக்கும் அஞ்சாத போராட்டங்களை நடாத்திய ஒரு வரலாற்றைக் கொண்ட மாவை நாளை தனது விசுவரூபத்தை வெளிப்படுத்துவார்ளூ "தமிழரசுக்கட்சியினர் சும்மா சும்மா உசுப்பேத்திப் பேசுவார்களே தவிர. சொன்னபடி செய்யவேண்டுமே என்று யோசிக்க மாட்டார்கள்" என்று நையாண்டி பேசுவோரின் வாயை அடைப்பார் என்றே அவரது தொண்டர்கள் நம்பிக்கையோடிருக்கிறார்கள்.

மக்களும் மாவையரின் அகிம்சைப் போராட்டங்களால் 2015-ல் எப்படியும் ஒரு முடிவு வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நடிகர் வடிவேலு பட நகைச்சுவை போல, "வரும் ஆனால் வராது" என்று மாவையாரின் அகிம்சைப் போர் அறிவிப்பைக் கிண்டல் பண்ணுகிறவர்களுக்கு, தான் அப்படியல்ல என்று காட்டித் தங்கள் வயிற்றில் பாலை வார்ப்பார் தலைவர் என்று மாவையாரின் தொண்டர்களும் நாளைய தினத்தைக் பார்த்திருக் கிறார்கள்.

# நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் இறைவனுக்கு அடுத்த நிலையில் ஜனாதிபதி

## முன்னாள் அமைச்சர் பஷீர் புகழாரம்

(கொழும்பு)

நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் விசேடமாக முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு இறைவனுக்கு அடுத்தபடியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே திகழ்வதாகவும் அவரிடம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத் தெரிவித்துள்ளார்.

உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சராக இருந்த முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த பஷீர் சேகுதாவூத் நேற்று முன்தினம் அரசிலிருந்து வெளியேறினார். தாம் வெளியேறியமைக்கான காரணங்களை ஜனாதிபதி மகிந்தவுக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

தமது கட்சி எடுத்த தீர்மானத்திற்கு இணங்க வேண்டிய



நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் முஸ்லிம் மக்களிடையே தமது கட்சி துரோகம் இழைக்கிறது என்ற நிலைப்பாட்டை இல்லாமல் செய்ய வும் அதிகாரத்தில் பேராசை கொண்டவர்கள அல்ல என்பதை தெரிவிக்கவுமே தாம் ராஜினா மாச் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவின் தலைமைத்துவத்தின் கீழ் ஏற்பட்ட அதிருப்தியோ அல்லது நம்பிக்கையின்மை காரணமாகவோ தாம் தமது அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்யவில்லை என்றும் கூறியுள்ள அவர் நாட்டுப்பற்றுள்ள பிரஜையாக அனைத்து மக்களிடையேயும் ஐக்கியத்தை ஏற்படுத்த ஜனாதிபதி ஆற்றிய சேவையை மறுக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக தேர்தல் பிரசார நடவடிக்கையெதிலும் ஈடுபடப்போவதில்லை என்று தெரிவித்துள்ள அவர் ஓர் அமைச்சராக இருந்து ஜனாதிபதிக்காக வாக்கு சேகரிக்க முடியாத நிலை ஏற்பட்டமையிட்டு வருந்துவதை தாழ்மையாக அறிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டத் தாம் இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் ஜனா திபதி மகிந்தவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# அடையாள அட்டை வழங்க ஒரு நாள் விசேட சேவை

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஒருநாள் சேவையில் தேசிய அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய ஆட்பதிவுத்திணைக்களத தினால் இந்த சேவை வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டை இல்லாத வர்கள் இந்த விசேட சேவையில் பயன் பெற முடியும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி இந்த விசேட சேவை அமுல்படுத்தப்பட உள்ளது.

காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் விண்ணப்பங்களை ஒப்படைத்து தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியும். ஆவணங்களை சரிபார்த்து உரிய முறையில் சமர்ப்பிப்பதன் மூலம் ஒரே நாளில் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

# பேருவளை தாக்குதல் சம்பவம் விசாரணைக்கு கோரிக்கை



(கொழும்பு)

பேருவளையில் தமது வாகனம் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி பேருவளை பிரதேசத்தில் வைத்து தமது வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்துள்ளார்.

கடிதமொன்றின் மூலம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் நிறைவில் பிரதேச தொகுதி அமைப்பாளரின் வீட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்த போது, தமதும் மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திரவினதும் வாகனங்கள் தாக்கப்பட்டதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்களை தடுக்க பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கலகத் தடுப்பு பொலிஸாரும் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அவர்கள் சம்பவத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் தாக்குதலை தடுத்து நிறுத்த பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போலியான பேஸ்புக் பிரசாரம் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது

## ஜனாதிபதி அறிவுறுத்து

பேஸ்புக்மூலமான போலிப் பிரசாரங் களுக்கு மக்கள் ஏமாந்துவிடக்கூடாது என ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பேஸ்புக் சமூக வலைத் தளத் தின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். வெறுமனே மாற்றம் அவசியம் தேவை என்பதை விடவும் எதற்காக மாற்றம் தேவை என்பது முக்கியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் லிபிய அதிபர் முஹம்மர் கடாபிக்கு நேர்ந்ததே தமக்கும் நேரும் என சிலர் குறிப்பிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் ஆதரவு இருக்கும் வரையில் எவராலும் தம்மைத் தோற்கடிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி யுத்தம் முடிவுறுத்தப்பட்டதாகவும் அதனையே மக்கள் விரும்பியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைக்குமாறு சில தரப்பினர் கோரி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.தேசிய பாதுகாப்புக்காரணங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையிலும், கொழும்பிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் காணப்படுவதாகவும் வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை மட்டும் எவ்வாறு அகற்றுவது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டை பிளவுபடுத்தவோ அல்லது தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் நெகிழ்வுத் தன்மையை காட்டவோ இடமில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# மகிந்தவின் வெற்றி உறுதி குதிரை ஓட்டுகிறார் ரணில்

## கூறுகிறார் நிமால்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதியாகிவிட்டது, வெற்றியின் பின்னர் எம்மிடமிருந்து சென்றவர்கள் மீண்டும் எம்மிடமே திரும்பி வரவேண்டிய நிலை உருவாகும் என அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அப்போது அவர்கள் மன்னிப்பு கேட்டே வர வேண்டும் என்பதுடன் எமது நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாகவே வர வேண்டும். இதற்காக ஜனாதிபதி யின் சலூன் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்றும் தெரிவித்தனர்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசார கோஷங்கள் அனைத்தும் பொய்த்துப் போயுள்ளன.

அவர்கள் ஒவ்வொருவரினதும் நிலை பாடுகள் ஒன்றுக் கொன்று முரண்பட்டவையாகவே உள்ளன.

பரீட்சையில் பல தடவைகள் தோல்வியுற்ற ஒருவர் எப்படியாவது பரீட்சையில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மற்றொருவரை குதிரை ஓடுவதற்கு நியமிப்பது போன்று 29 தடவைகள் தேர்தலில் தோல்வியுற்ற ரணில் எப்படியாவது பதவியேற்க வேண்டும் என்பதற்காக மைத்திரியை குதிரை ஓடுவதற்கு விட்டுள்ளார் என்றும் அமைச்சர் நிமால் தெரிவித்துள்ளார்

# தேர்தல் பிரசாரத்திற்காக நடிகர் சல்மான் வரவில்லை

## என்கிறார் எரிக்-எம்-பி



(கொழும்பு)

பிரபல இந்தி நடிகர் சல்மான் கான் தேர்தல் பிரசாரத்திற்காக இலங்கை வரவில்லை என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எரிக் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மருத்துவ முகாம் ஒன்றில் பங்கேற்பதற்காகவே சல்மான் கான் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் காணப்படும் நெருங்கிய உறவே சல்மான் கான் இலங்கைக்கு விஜயம் செய்யக் காரணம்.

பணம் கொடுத்து தேர்தல் பிரசாரத்திற்காக சல்மான் இலங்கைக்கு அழைத்து வரப்படவில்லை.

சல்மான்கானை பாரியளவு பணம் கொடுத்து இலங்கைக்கு அழைத்து வந்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

சல்மானின் அறக்கட்டளையான பீயிங் ஹியூமன் அமைப்பும் இந்த மருத்துவ முகாமிற்கு பங்களிப்பு வழங்கியது.

வேறு நபர்களின் நட்பு பணரீதியானது என்ற போதிலும், நாமல் ராஜபக்ஷவின் நட்பு பணரீதியானதல்ல என எரிக் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

சல்மான் கான் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவது குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# விரதங்களுள் சக்தி வாய்ந்த வைகுண்ட ஏகாதசி விரதம்



ஏகாதசி விரதமானது எல்லா விரதங்களுக்குள்ளும் மிகவும் சக்தி வாய்ந்தது இவ் விரதத்தின் இறுதிநாள் நாளை வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் இவ் விரதம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. ஒன்றையும் உண்ணாமலிருப்பதே உபவாசம். அன்னம், பால்,



தீர்த்தம் இவற்றுள் ஒன்றையாவது உட்கொண்டால் அது விரதமாகாது.

புராதன காலத்தில் மாபெரும் மன்னனாகிய ருக்குமாங்கதன் அனைவரும் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென ஆணையிட்டான் விரதம் அனுஷ்டித்த அனைவரும் பூரண ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்தனர். இதனால் யமனுக்கு வேலை குறைந்துவிட்டது. இதற்காக தேவர்கள் மோகினியை அனுப்பினார்கள். காட்டுக்கு வேட்டைக்குச் சென்ற ருக்குமாங்கதன் அவள் மீது மோகம் கொண்டு அவளைத் திருமணம் செய்து கொண்டான்.

ஏகாதசி தினத்தில் அதிகாலை எழுந்து மன்னன் மோகினியை ஸ்நானம் செய்து பூஜை அறைக்கு வருமாறு உபவாசிமிருந்து "பகவத் கதா சிவரணம்" கேட்கலாமென கூறினான். இவையெல்லாம் தேவையில்லாததொன்று என மோகினி கூறினாள். .அப்பொழுது மன்னனுக்கு தான் செய்த தவறு தெரிந்தது. தன் சொல்லை மீறினால் அருமைமைந்தன் தர்மாங்கதன் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த வேண்டியிருக்கும் என்றாள் மோகினி. மோகினி வார்த்தையால் சினமுற்ற மன்னன் தன்மைந்தனை வெட்டி உனக்கு பலியாக்கி விட்டு ஏகாதசி விரத பங்கு இல்லாமல் செய்கிறேன் என்று கூறி மன்னன் வாளை வீசவே அது தர்மாங்கதன் கழுத்தில் பூமாலையாக வீழ்ந்தது. அத்தருணத்தில் மன்னனாகிய தங்களது மன உறுதியைப் பரீட்சிக்கவே தான் மோகினி வடிவாக வந்ததாகவும் கூறி தர்மதேவதை மறைந்தார்.

ஏகாதசியில் உபவாசமிருக்காதவர்களுக்குப் பாரணை பலன் தராது. துவாதசி எத்தனை நாள் இருக்கின்றீர்களோ அதில் எட்டில் ஒரு பாகத்திற்கு "ஹரி வாஸம்" என்று பெயர் அந்தச்சமயம் பூசை முடிந்து உண்பது பகவானுக்கு அன்னமிடுவதாகும்.

பகல் தூக்கம் எண்ணை ஸ்நானம், ஸ்திரிபோகம் ஏகாதசி விரதத்தின் புனிதத் தன்மையை அகற்றிவிடும்.

மஹா விஷ்ணுவிற்கு பிரியமான ஏகாதசி நோன்பை இந்துக்கள் முக்கிய நோன்பாக அனுஷ்டிப்பது வழமை வளர்பிறையில் ஒன்றும் தேய் பிறையில் ஒன்றும் மாதம் இருமுறை உபவாசமிருப்பது உடல் நலத்திற்கு நன்மை பயப்பதாக அமையும் மார்கழி மாதங்களில் சிறந்த மார்கழித் திங்களில் வரும் வளர்பிறை ஏகாதசி இறையன்புக்கு முக்கியமானதாக அமையும்.

விஷ்ணு ஆலயங்களில் வைகுண்ட ஏகாதசியன்று திறக்கப்படும் வைகுண்ட வாசல் வழியாகச் சென்று திருமாலைத் தரிசனம் செய்தால் பிறப்பு இறப்புகளிலிருந்து விடுபட்டு வீடு பேற்றை எய்த முடியும் என்பது நம்பிக்கை.

ஈழத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களான பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம், வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் ஆலயம், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமான் ஆலயம் என்பவற்றில் வைகுண்ட ஏகாதசி, சுவர்க்க வாசல் திறப்பு என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கலாபூஷணம்.
க.லோகேஸ்வரன்
தொல்புரத்தூர்.

# இனந்தெரியாதோரால் அச்சமடையும் பயணிகள்

(அச்சுவேலி)

யாழ்.பஸ்தரிப்பிடப்பகுதியில் இனந்தெரியாதோரின் நடமாட்டம மீண்டும் காணப்படுவதாக பயணிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பயணிகள் பஸ்ஸிற்காககாத்திருக்கும் இருக்கைகள் மற்றும் நடைபாதைகளில் இவர்கள் படுத்துறங்குவதால் பயணிகள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் புறப்படுவதற்கு தயார் நிலையில் உள்ள பேருந்துகளிலும் இத்தகையவர்களின் நடமாட்டம் காணப்படுவதால் தொல்லைகளும் அதிகரித்துள்ளதால் பயணிகள் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அலுவலகங்களில் கடமைபுரிந்து விட்டு பேருந்து சென்றுவிடும் என அவசரமாகச் சென்று பேருந்தில் ஏறி பயணிக்க இருப்போருக்கு இத்தகையவர்களின் செயற்பாடு எரிச்சலூட்டுவதாகவும் அமைகின்றது.

அதுமட்டுமன்றி இவர்கள் தமது குழந்தைகளையும் தெருவில் திரியவிடுவதுடன் பிள்ளைகளுக்குத் தேவையான அடிப்படைக் கல்வியையும் வழங்காது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறு அநாதரவாக அலைவோர் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அல்லது அவர்களின் உறவினர்கள் அவர்களுக்கு வேண்டிய உதவி களை மேற்கொண்டு உரிய இடங்களில் சேர்க்க வேண்டும் என சமூக நலன்விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு
01.01.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




- தேர்தல் விஞ்ஞாபனமும் சிறுபான்மை மக்களும்
- சர்வதேசங்களின் பயங்கரவாதப் பட்டியல்
- வெல்லப் போவது யார்?
- காலத்துக்குக் காலம் கொள்ளையிடும் வெள்ளம்



உன்னை அறிந்தால்...


உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# போடர்–கவாஸ்கர் தொடரை தன்வசப்படுத்தியது ஆஸி.

(மெல்பேர்ன்)

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மெல்பேர்ன். டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட போடர் -. கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரை ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக்கொண்டது.



இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று மெல்பேர்னில் நிறைவடைந்தது.

இதில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இறுதி நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. ஒரு முனையில் மிகவும் சிறப்பான முறையில் மார்ஷ் ஆட மறுமுனையில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஜோன்சன் செயற்பட்டார். எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 69 ஓட்டங்களைப் பெற்ற வேளை (ஜோன்சன்) பிரிக்கப்பட்டது. ஒரு முனையில் நிதானமாக ஆடி சதத்தை நெருங்கிய மார்ஷ் ஒரு ஓட்டத்தினால் அந்த வாய்ப்பை நழுவவிட்டார். நிறையில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் மார்ஷ் 215 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 99 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். மற்றும் ஜோன்சன் 15, ஹரிஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாதவ், மொஹமட் சமி, இசாந்த் சர்மா, அஸ்வின் ஆகியோர் தலா இரு. விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 384 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 19 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குள் மளமளவென பறிகொடுத்தது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ரஹானே, ஹோலி இணை மிகவும் பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. நிதானமாக ஆடிய இந்த ஜோடி 85 ஓட்டங்களைப் பெற்றவேளை (ஹோலி) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து புஜாரா, டோனி ஆகியோர் களத்தில் நிலைத்திருந்து போட்டியைச் சமப்படுத்த முயன்றனர். நிறைவில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதில் ஹோலி 99 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 54, ரஹானே 117 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 48, புஜாரா 70 பந்துகளில் 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது டோனி 24, அஸ்வின் எட்டு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜோன்சன், ஹரிஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தனர். அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 530. இந்தியா முதல் இனிங்ஸ் 465. போட்டியின் ஆட்டநாயகனாக ஹரிஸ் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான நான்காவதும் இறுதியுமான ஆட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நான்கு ஓவர்கள் இருக்கும் நிலையில் மெல்பேர்ன் டெஸ்ட் ஆட்டத்தை நிறைவுக்குக் கொண்டுவந்தமை கிரிக்கெட் வல்லுநர்களிடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. நான்கு ஓவர்களிலும் இந்திய அணியின் கடைசி நிலை ஆட்டக்காரர்களை வீழ்த்தியிருக்கலாம் என்றும், இதன் மூலம் இந்திய அணியை வைட்வோஷ் செய்யக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கும் என அவுஸ்ரேலிய அணி சார்பானோர் குற்றம்சாட்டியுள்ளனர்.

அத்துடன் ஸ்மித்தோ அல்லது அணி நிர்வாகமோ இந்திய அணிக்கு 300 ஓட்டங்கள் இலக்காக வைத்து துடுப்பாட அழைத்திருந்தால் அவுஸ்ரேலிய அணிக்கான வெற்றிவாய்ப்பு அதிகரிக்கப்பட்டிருக்கும் என சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால், அடிலெய்ட்டில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி இலக்கை சிறப்பான முறையில் விரட்டி இறுதி நேரத்தில் தோல்வியைத் தழுவியதைக் கருத்தில் கொண்டே அவுஸ்ரேலிய நிர்வாகம் தாமதமாக இந்தியாவை துடுப்பாடஅழைத்தாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## வார்த்தைப் போர் அணிக்கு நல்லதல்ல

(மெல்பேர்ன்)

மெல்பேர்ன் டெஸ்ட் போட்டியில் இந்திய - அவுஸ்ரேலிய வீரர்கள் வார்த்தை மோதலில் ஈடுபட்டனர்.

ஹோலி - ஜோன்சன் ஆகியோர் நேரடியாக மோதிக் கொண்டனர். நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தின் போது இந்த மோதல் போக்கு வெடித்தது.

ஜோன்சன் அவுட் ஆன போது ஹோலி ஏதோ கூறினார். மேலும் ஹடின் துடுப்பாட்டம் செய்தபோது அவர் அருகில் நின்ற ஹோலி ஏதோ பேசிக் கொண்டே இருந்தார். வீரர்களின் இந்த மோதல் குறித்து முன்னாள் இந்திய கப்டன் சுனில் கவாஸ்கர் கூறியதாவது:

பிரிஸ்பேன் டெஸ்டில் ஜோன்சனை இந்திய வீரர்கள் வெறுப்பேற்றினர். இதனால் அவர் துடுப்பாட்டம், பந்து வீச்சில் அசத்தினார்.

இதுபோலவே மெல்பேர்ன் டெஸ்டிலும் நடந்துள்ளது. ஹோலியை அவர்கள் வெறுப்பேற்றி இருக்கிறார்கள். அதுபோல நாமும் செய்தால் இது அணியை எவ்வாறு பாதிக்கும் என்பதை ஹோலி அறிந்து கொள்ள வேண்டும். ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். உங்களை வெறுப்பேற்றினால் துடுப்பால் பதில் சொல்லவேண்டும். அவர்கள் மாதிரி செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# புத்தாண்டு இலட்சியம்



ஆறடி உயரமும் அசரடிக்கும் அழகும் கொண்டவர் சேர்பியாவின் இவானோவிச், (வயது-27). முன்னாள் முதல் நிலை வீராங்கனையான இவருக்கு இரசிகர் பட்டாளம் ஏராளம். சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச பிரிமியர் ரென்னிஸ் லீக் தொடரில் இந்தியன் ஏசஸ் அணி சார்பில் விளையாடினார். இதில் கோப்பையும் வென்று அசத்தினார்.

இந்த நிலையில் தனது புத்தாண்டு இலக்கு குறித்து இவர் கூறியதாவது,

இந்த ஆண்டு நடந்த தொடர்களில் மிகப்பெரிய அளவில் சாதிக்கவில்லை. அமெரிக்காவின் செரினா, ரஷ்யாவின் ஷரபோவாவை வீழ்த்தியது ஆறுதல் தந்தது. என் திறமையை அதிகரிக்க, தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன். இதன் மூலம், அடுத்த ஆண்டு ஏதாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தில் கோப்பை வெல்ல முடியும் என நம்புகிறேன். இதைத்தான் எனது கனவாகவும் வைத்துள்ளேன். இழந்த முதல் நிலை இடத்தையும் பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# கிரிக்கெட்டில் சாதிக்க நீண்ட காலம் எடுக்கும்

(யாழ்ப்பாணம்)

கிரிக்கெட்டில் உடனடியாக சாதிக்க முடியாது. சாதிப்பதற்கு நீண்ட காலம் எடுக்குமென இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும் சாதனையாளருமான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.



யாழ். மத்தி கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வடக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் மற்றும் கழகங்களுக்கான கிரிக்கெட் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு கிரிக்கெட் பயிற்சியினை அளித்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் விளையாடும்போது விளையாட்டில் மிக கவனம் செலுத்தவேண்டும். சாதிக்க வேண்டுமென்றால் விளையாட்டில் எந்தளவிற்கு விளையாட முடியுமென்பதை உங்களுக்குள் ஊக்குவித்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் உங்கள் திறமைகளை வெளிக்காட்ட முடியும்.

சிறுவயது முதல் கிரிக்கெட்டினை கற்றுக் கொள்ளவேண்டும். எனினும் அனைத்து விடயங்களையும் அந்த வயதில் கற்றுக்கொள்ள முடியாது. அதற்கு நீண்ட காலம் எடுக்கும். முயற்சியின் மூலம் பயிற்றுவிப்பாளருடன் கலந்து உங்களை ஊக்குவித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் முக்கியமாக பாடசாலைகளில் உள்ள அணிகளுக்குள் விளையாட வேண்டும்.

தேசிய ரீதியில் விளையாட வேண்டுமாயின் பாடசாலை மட்டத்தில் திறமைகளை வெளிக்காட்ட வேண்டும். அதன் பின்னர் கழகங்கள் ரீதியில் திறமையைக் காட்ட வேண்டும். மாகாண ரீதியில் திறமைகாட்ட வேண்டும். இதன் மூலம் இலங்கை அணியில் இணைந்து கொள்ள முடியும். அதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

சாதிக்க வேண்டுமென்ற முயற்சியுடன் உங்கள் மனநிலையினை கட்டுப்படுத்தி திறமைகளை வெளிக்காட்டி வளர முடியும். சிறு வயதில் காட்டும் திறமைகள் தான், வெற்றிக்கு வழி வகைக்கும். அந்த மனநிலையுடன் மற்றவர்களுக்கு திறமைகளை வெளிக்காட்டுமாறு மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

(25, பா)

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்றார் டோனி

(புதுடில்லி)



டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து மகேந்திர சிங் டோனி ஓய்வு பெறு வதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை நேற்று வெளியிட்ட செய்தியில், இந்தியாவின் சிறந்த டெஸ்ட் கப்டன்களில் ஒருவர் மகேந்திர சிங் டோனி. இவரது தலைமையில் இந்திய அணி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்தை அடைந்தது. தற்போது அவர் மற்றய போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக டெஸ்ட் போட்டியிலிருந்து உடனடியாக ஓய்வு பெறுகிறார் என்று கூறியுள்ளது.

ருவெண்ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் டோனி கவனம் செலுத்த இருப்பதாகவும் அதனால் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

டோனியின் இந்த முடிவை ஏற்பதாக அறிவித்த கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டியில் அவரது மகத்தான பங்களிப்பிற்காக நன்றியும் கூறியுள்ளது.

டோனி ஓய்வு பெறுவதால் எஞ்சியிருக்கும் ஒரு டெஸ்ட் போட்டிக்கு ஹோலி கப்டனாக இருப்பார் என்றும் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதுவரை 90 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள டோனி, 4876 ஓட்டங்கள் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நெற்பயிர்கள் அழியும் அபாயம் கவலையடையும் அச்சுவேலி விவசாயிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி பகுதி தோட்ட நிலங்களும் வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளதால் அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழியும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டமடைய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வெங்காய செய்கையினை மேற்கொள்ளவுள்ள விவசாய நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளதால் விவசாயச் செய்கையினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நடுகைக்கு வைக்கப்பட்டுள்ள விதை வெங்காயம் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் மிளகாய் நாற்றுமேடைகளும் மழை வெள்ளம் காரணமாக அழிவடைந்து வருகின்றது.

கடந்த வருடத்திலும் இயற்கை அனர்த்தம் காரணமாக விவசாயிகளின் வெங்காயப் பயிர் முற்றாக அழிவடைந்த நிலையில் வங்கிக்கடன்களைச் செலுத்த முடியாத நிலையில் உள்ள விவசாயிகள் தற்போது பெய்து வரும் கன மழை காரணமாக விவசாயச் செய்கைகள் பாதிப்படைவதாகவும் விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (85)

# சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது



பொலிகையூர் சிந்துதாசனின் காணாமற்போன காற்று எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 03.30 மணியளவில் இடம்பெற்றது.

செல்வி சே.செல்வசுகுணா (கலாசார உத்தியோகத்தவர் வடமராட்சி வடக்கு) தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இ.ஜெயசீலன் (பிரதேச செயலர் வடமராட்சி வடக்கு) கலந்து கொண்டு சிறபபித்தார்

நூலின் வெளியீட்டுரையை பி.கிருஷ்ணானந்தன் நயப்புரையை குப்பிளான். ஐ.சண்முகன் ஆகியோர் வழங்கினார். இச்சிறுகதை தொகுப் பின் முதற் பிரதியை வ.ஆ.அதி ரூபசிங்கம் பெற்றுக்கொண்டார்.

# முன்பள்ளி பாடசாலை சிறார்களுக்கு உபகரணங்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தண்டுவான் அமைப்பாளர் நிஷாந்தனின் ஏற்பாட்டில் தண்டுவான் 17ஆம் கட்டை கரடிப்பிலவு ஆகிய கிராமத்திலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இணைப்பாளரும் ஜனாதிபதி இணைப்பாளருமான ச.கனகரத்தினம் இக் கற்றல் உபகரணங்களை வழங்கினார். இதில் அ. றங்கதுரை கலந்து கொண்டார். (40)

# அனர்த்தத்தால் பாதிப்புற்ற ஞானிமடம் மக்களுக்கு உதவி

## சந்திரகுமார் எம்.பி. நடவடிக்கை



(கிளிநொச்சி)

அண்மைக்காலமாக தொடர்ச்சியாக நில்விவரும் சீரற்ற கால நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 4454 குடும்பங்களைச்சேர்ந்த 16594 பேர் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் இவர்களில் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களை சென்று பார்வையிட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் அம்மக்களுக்கு உடனடி அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகின்றார்

அதனடிப்படையில் நேற்று முன்தினம் பூநகரி பிரதேசத்திற்கு விஜயம் செய்த அவர் ஞானிமடம் செம்மன்குளம் கிராமத்தில் மழைவெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து செம்மன்குளம் கடற்றொழிலாளர் ஓய்வு மண்டபத்தில் தங்கியுள்ள மக்களை பார்வையிட்டார், அத்தோடு அங்கு தங்கியுள்ள 13 குடும்பங்களுக்கும் நுளம்புவலைகள் பாய்கள் விளக்குகள், தண்ணீர்கான்கள் போன்ற உடனடி அத்தியாவசியப் பொருடகளை வழங்கினார்.

இதன்போது மக்கள் எதிர்கொண்டுவரும் சிரமங்கள் குறித்தும் கேட்டறிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மக்களுக்கான இரண்டு வாரத்திற்கான உலருவுணவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிட்டார்

இவ் விஜயத்தின் போது பூநகரி பிரதேசசபை உறுப்பினர்களான குகேந்திரன் மற்றும் இராசலிங்கம் ஆகியோரும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் அலுவலர்களும் உடன் சென்றிருந்தனர்.

# சங்க கிளைக்கு மின்சாரம்

(வடவரணி)

தென்மராட்சி வட வரணி ஈ.8 பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்கு இதுவரை காலமும் மின்சார வசதி இல்லாதிருந்த நிலையில் தற்போது மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சங்க வளாகம் தற்போது பூரணமான பாதுகாப்பாக உள்ளது. மேலும் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டதால் இரவுக் காவலாளிக்கு மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (150)

# ஊடகவியலாளர் சந்திப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தீல் இணைப்பாளர் அ.றங்கதுரையின் ஏற்பாட்டில் ஊடகவியளாலர் சந்திப்பு முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் இடம் பெற்ற இச்சந்திப்பில், ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு முன்னணியின் அமைப்பாளர்களினால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதில் ச.கனகரத்தினம், கலாநிதி சண்முகராஜா அ.நீதன் அ.றங்கதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஜனாதிபதியின் வெற்றியினை உறுதி செய்வதற்கும் அண்மைக் காலத்தில் ஜனாதிபதி யினால் ஏற்படுத்தப்பட்ட அபிவி ருத்திகள் தொடர்பாகவும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# காரைநகர் மணிவாசகர் சபையின் சைவநெறித் தேர்வு முடிவுகள்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய சைவநெறித் தேர்வில் ஒவ்வொரு தரத்தில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

தரம் 02: ப. துவாரகா (வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை), அ. நேத்திரா, பி. தனுசினி (யாழ்ரன் கல்லூரி), தி. றஜீவன் (வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை), நி. கோபிசன் ( ஊரி அ.மி.த.க. பாடசாலை)

தரம் 03: இ. தமிழினி (வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை), லி. சரணியா (யாழ்ற்ரன் கல்லூரி), க. துவாரகன் (வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), சி. விதுர்சன் (சுப்பிரமணிய வித்தியசாலை), செ. தர்ஷிகா (யாழ்ற்ரன் கல்லூரி), கா. யதுர்சிகா (ஊரி அ.மி.த.க. பாடசாலை), ம. யதுர்சன் (சுப்பிரமணிய வித்தியாசாலை)

தரம் - 04: தி. கம்சிகா (யாழ்ற்ரன் கல்லூரி), த. விதுஷாலினி (தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம்), இ. சுவேதன் (சுப்பிரமணிய வித்தியாசாலை), ந. கிறிஸ்ரிகா (யாழ்ற்ரன் கல்லூரி), ப. விஜிகரன் (மெய்கண்டான் வித்தியாலயம்), ஈ. தமிழ்ச்சுடர் (தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம்).

தரம் - 05: பி. ரேந்தினி, பு. கஜதீபன், ந. துளசி (யாழ்ற்ரன் கல்லூரி), உ. பிருந்தா (சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்), அ. யேயந்தினி (சுப்பிரமணிய வித்தியாசாலை).

தரம் - 6 இ. தமிழினி (சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்), வி. கஜந்தினி (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி), சி. கனிஸ்ரன், க. யுவேதிகா (யாழ்ற்ரன் கல்லூரி), வி. விஜிதா, யோ. அபிஷா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வித்தியாலயம்).

தரம் - 07: ஆ. பேபிசாமினி, வி. அபிராமி, செ. கஜரூபன், மோ. நவமயூரன், ச. கஸ்தூரி (யாழ்ற்ரன் கல்லூரி)

தரம் - 8 : பா. சிவராஜினி (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), அ. பிரணவரூபன், இ. ஜனனி, செ. நாகதீபா (யாழ்ற்ரன் கல்லூரி), ஏ. கோபிநாத் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.)

தரம் - 09: தே. கம்சிகா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), யோ. கோபிகா (யாழ்ற்ரன் கல்லூரி), இ. கிருத்திகா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி), செ. கீர்த்தனா, ப. யாழினி, லோ. குருபரன் (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம் - 10: பா. குலமதி, க. அபினோஜா, இ. லக்சிகா, கி. பிரியா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), ப. துவார்கா (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம் - 11: க. அபிராமி (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி), த. திருமகள், ம. நவிநிலா, செ. கமலேஸ்வரி, வி. வேதாரணி (யாழ்ற்ரன் கல்லூரி).

தங்கப் பதக்கம் பெறுபவர்கள், ப. துவாரகா (வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை), பி. ரேந்தினி (யாழ்ற்ரன் கல்லூரி), இ. தமிழினி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), தே. கம்சிகா, க. அபிராமி (கலாநிதி ஆ. தியாக ராஜா ம.ம.வி).

இவர்களுக்கான பரிசில்களும், தங்கப் பதக்கங்களும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் மணிவாசகர் விழாவில் வைத்து வழங்கப்படும் என மணிவாசகர் சபையின் இணைச் செயலாளர் து. நாகேந்திரன் தெரிவித்துள்ளார். (10)

# சரஸ்வதி வித்தியாலய வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

கரணவாய் இராஜ கிராமத்திலிருந்து சரஸ்வதி வித்தியாலயத்திற்குச் செல்லும் முதலாம் ஒழுங்கை வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் இதனூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இவ்வீதி நீண்ட காலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி குண்டும் குழியுமாக சேதமடைந்து காணப்படுவதுடன் வீதியில் வெள்ள நீர் தேங்கி சேறும் சகதியுமாக வீதி காணப்படுவதாகவும் இதனால் இதனூடாக செல்லும் வாகனங்கள் சேற்றில் புதையும் அவல நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இக்கிராமத்திற்கு மின்சாரம் இதுவரை வழங்கப் படவில்லை. எனவும் இதனால் இக்கிராம மக்களின் நாளாந்த செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமங்களுக்குள்ளாவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சேதமடைந்துள்ள இவ்வீதியை கரவெட்டி பிரதேச சபையினர் பார்வையிட்டு புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# 2014 இல் உலகம்

**ஜனவரி**

12 : ஷேக் ஹசீனா வங்கதேசப் பிரதமராகப் பொறுப்பேற்றார். அவர் மூன்றாவது முறையாக அந்நாட்டின் பிரதமரானார்.

15 : இராக்கில் தொடர் குண்டு வெடிப்பில் 73 பேர் பலியானார்கள்.

**பெப்ரவரி**

10 : நேபாளத்தில் நீண்ட கால அரசியல் குழப்பத்துக்குப் பிறகு, சுஷீல் கொய்ராலா (74) பிரதமராகப் பொறுப்பேற்பு.

11 : அல்ஜீரிய ராணுவத்தினரை ஏற்றிச் சென்ற பாதுகாப்புப் படை விமானம் நொறுங்கி விழுந்து 77 வீரர்கள் பலியாகினர்.

18 : உக்ரைன் தலை நகர் கீவில் காவல் துறையினருக்கும் அரசு எதிர்ப்பாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு நாட்களில் மொத்தம் 77 பேர் உயிரிழந்தனர்.

20 : ஆப்கானிஸ்தானை யொட்டிய வடக்கு எல்லைப் பகுதியில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் போர் விமானங்கள் நிகழ்த்திய தாக்குதலில் 40இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

25 : நைஜீரியாவில் பள்ளிக்கூடத்தில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் 43 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

**மார்ச்**

1 : உக்ரைன் கூட்டாட்சியின் கீழ் இருந்த கிரீமியா பகுதி முற்றிலும் ரஷிய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் வந்தது.

1 : சீனாவின் தென் மேற்குப் பகுதியில் உள்ள குன்மிங் ரயில் நிலையத்துக்கு கத்திகளுடன் வந்த சில நபர்கள், அங்கிருந்த பயணிகளைத் தாக்கியதில் 27 பேர் உயிரிழந்தனர். 107 பேர் காயமடைந்தனர்.

3 : பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் நீதிமன்ற வளாகத்தில் நிகழ்த்திய தற்கொலைத் தாக்குதலில், நீதிபதி உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 29 பேர் காயமடைந்தனர்.

17 : உக்ரைன் நாட்டிலிருந்து பிரிந்து, கிரீமியா தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டது. பெரும்பாலான மக்கள் ஒப்புதல் அளித்ததையடுத்து, ரஷியாவுடன் இணைவதாக அறிவித்தது. 20 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் யூனியன் பல்வேறு நாடுகளாகப் பிரிந்தபோது, கிரீமியா பகுதி உக்ரைனுடன் சேர்க்கப்பட்டது. இப்போது மீண்டும் ரஷியாவில் இணைந்துள்ளது.

**ஏப்ரல்**

14 : நைஜீரியாவின் அபுஜா நகர் பேருந்து நிலையத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 71 பேர் பலியா-கினர். 2 ஆண்டுகள் கழித்து இந்த நகரில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் நிகழ்த்திய மிகக் கொடூரமான தாக்குதல் இது.

**மே**


16 : பெரும்பாலும் பள்ளி மாணவர்களை ஏற்றி, "ஜேஜு" என்ற சுற்றுலாத் தீவு நோக்கிச் சென்ற தென்கொரிய படகு, 462 பேருடன் நடுக்கடலில் கவிழ்ந்தது. 304 பேர் உயிரிழந்தனர்.


19 : தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில், பள்ளிப் பேருந்து தீப்பிடித்து வெடித்ததில், 32 குழந்தைகள் உயிரிழந்தனர்.

20 : நைஜீரியாவில் ஒரே நாளில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் மூன்று கிராமங்களில் நிகழ்த்திய தாக்குதல்களில் 260இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

**ஜூன்**

7 : உக்ரைனின் ஐந்தாவது அதி-பராக பெட்ரோ பொரோஷென்கோ





பதவியேற்றார்.

8 : எகிப்து அதிபர் தேர்தலில் முன்னாள் ராணுவத் தலைமைத் தளபதி அப்துல் ஃபட்டா அல்-சிசி 97 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்று, பதவியேற்றார்.

15 : கராச்சி விமான நிலையத்தில் தலிபான் பயங்கரவாதிகள் தாக்குதல் நிகழ்த்தி 29 பேரைக் கொன்றதற்குப் பதிலடியாக, தெற்கு வஜிரிஸ்தான் மாகாணத்தில் பாகிஸ்தான் போர் விமானங்கள் நிகழ்த்திய தாக்குதலில் 150 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

21 : இராக் - சிரியா எல்லைப் பகுதி ராணுவ நிலை ஒன்றை இஸ்லா-மிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகள் கைப்பற்றினர்.

**ஜூலை**

1 : இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தற்காப்புக்காக மட்டுமே பயன்படுத்தும் வகையில் இருந்த ஜப்பான் ராணுவத்தை, படையெடுப்பு போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தும் வகையில், அந்நாட்டின் அரசியல் சாசனம் மாற்றம் செய்யப்பட்டது.

8 : காஸாவில் உள்ள ஹமாஸ் பயங்கரவாதிகளைக் குறிவைத்து இஸ் ரேல் நடத்திய தொடர் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். ஆகஸ்ட் 26 இந்தப் போர் முடிவுக்கு வந்தது.

17 : நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமிலிருந்து கோலாலம்பூர் சென்ற மலேசிய பயணிகள் விமானம் கிழக்கு உக்ரைன் பகுதியில் நொறுங்கி விழுந்தது. இதில் 280 பேர் உயிரிழந்தனர். ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படையினரால் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உக்ரைன் அரசு குற்றம்சாட்டியது. 29 : இராக்கிலும், சிரியாவிலும் கணிசமான பகுதியைக் கைப்பற்றியிருந்த ஐ.எஸ். பயங்கரவாதி கள், அங்கு "இஸ்லாமிய மத" அரசை நிறுவியுள்ளதாக அறிவித்தனர்.

**ஆகஸ்ட்**

2 : நேபாளத்தின் சிந்துபால்சௌக் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 152 பேர் உயிரிழந்தனர்.

3 : தென்மேற்கு சீனப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 367 பேர் உயிரிழந்தனர். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

8 : இராக்கில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த பகுதிகள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதலைத் தொடங்கியது.

18 : மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா ஃபாஸோவிலிருந்து புறப்பட்ட ஜெட் விமானம் மோசமான வானிலை காரணமாக விபத்துக்குள்ளானதில் 116 பேர் உயிரிழந்தனர்.

**செப்ரெம்பர்**

15 : ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதற்காக சிரியா, பாலஸ்தீனம், எகிப்து நாடுகளைச் சேர்ந்த 500 அகதிகள் சென்ற படகு, மால்டா கடல் பகுதியில் மூழ்கியதில் அவர்கள் அனை-வரும் உயிரிழந்தனர்.

**அக்டோபர்**

4: உலகிலேயே முதல் முறையாக "கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சை" செய்து கொண்ட பிறகு, ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த 34 வயதுப் பெண், குழந்தையைப் பெற்றெடுத்தார்.

13: இலங்கையில் 24 ஆண்டுகளுக் குப் பிறகு யாழ்ப்பாணம்-கொழும்பு இடையே ரயில் சேவை மீண்டும் தொடங்கியது. ஜனாதிபதி ராஜபக்ச கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

15: நேபாளத்தின் மேற்குப் பகுதி யில் பனிப்புயலில் சிக்கி 22 பேர் உயிரிழந்தனர். 85 பேர் மாயமானார்கள். மேலும், தோரங் கணவாய் பகுதியில் 16 பேர் உயிரிழந்தனர்.

23 : சிரியாவில் அமெரிக்கா தலைமையிலான ராணுவம் ஒரு மாதம் நடத்திய விமானத் தாக்குதலில் 553 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. அவர்களில், 464 பேர் ஐ.எஸ். தீவிரவாதிகள், எஞ்சியவர்கள் பொதுமக்கள் ஆவர்.

29 : இலங்கையின் பதுளை மாவட்டத்தில் மண் சரிவு ஏற்பட்டதில், 50 பேர் உயிரிழந்தனர்.

29 : வங்கதேசத்தில் 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரின்போது போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாக, ஜமாத்-இ-இஸ்லாமி கட்சித் தலைவர் மோடயுர் ரஹ்மான் நிஜாமிக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

29 : ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராக அஷ்ரஃப் கனி பதவியேற்றார்.

**நவம்பர்**

2 : இந்தியா-பாகிஸ்தான் இடையேயான முக்கிய எல்லைப் பகுதியான வாகாவில் கொடியிறக்க நிகழ்ச்சி முடிந்தவுடன், நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 11 பெண்கள், 3 படை வீரர்கள் உட்பட 55 பேர் உயிரிழந்தனர்.

2 : அமெரிக்காவின் சிகாகோ நகரில் நிக் வாலண்டா என்ற வீரர், பாதுகாப்புக் கவசமின்றி, பல மாடிக் கட்டடங்களுக்கு இடையில் கயிற்றின் மீது நடந்து சென்று சாதனை படைத்தார்.

10 : நைஜீரியாவில் மேற்கத்திய கல்வி முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, போகோ ஹராம் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் பள்ளி மாணவர்கள் 50 பேர் உயிரிழந்தனர்.

12 : ஐரோப்பிய விண்கலமான ரோஸெட்டா, 67பி.ஃசுரிமோவ்-கெரசிமென்கோ என்ற வால்நட்சத்திரத்தை வெற்றிகரமாகச் சென்றடைந்தது.

18 : சீனாவின் யீவு நகரில் இருந்து ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டுக்கு 13,000 கி.மீ. தொலைவுக்கு ரயில் சேவையை சீனா தொடங்கியது.

21 : சிறார் திருமணத்துக்கு உலக நாடுகள் தடை விதிக்க வலியுறுத்தி ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

23 : ஆப்கானிஸ்தானின் பக்டிகா மாகாணத்தில் உள்ள கைப்பந்துப் போட்டி மைதானத்தில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்தனர்.

31 : நைஜீரியாவில் 219 பள்ளிச் சிறுமிகளை "போகோ ஹராம்" பயங்கரவாதிகள் கடத்திச் சென்று, மதம் மாற்றி திருமணம் செய்ததாக அரசுத் தரப்பு கூறிய குற்றச்சாட்டை அந்த அமைப்பின் தலைவர் அபுபக்கர் ஷெகாவ் மறுத்தார்.

**டிசம்பர்**

2 : கென்யாவில் ஷெபாப் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் கல் குவாரி தொழிலாளர்கள் 36 பேர் உயிரிழந்தனர்.

6 : யேமனில் அமெரிக்கப் பத்திரிகையாளர் லூக் சோமர்ஸ், தென் ஆபிரிக்காவின் ஆசிரியர் பியரி கோர்கி ஆகிய இருவரும் அல்-கொய்தா தீவிர வாதிகளால் கொல்லப்பட்டனர்.

7 : பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ்தான் மாகாணத்தில் ராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.


11 : கொங்கோ நாட்டில் டான்கன்யிகா என்ற ஏரியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 129 பேர் உயிரிழந்தனர். 221 பேர் காப்பாற்றப்பட்டனர்.

13 : இந்தோனேசியாவின் ஜாவா தீவில் பலத்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

15 : அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உணவகம் ஒன்றில் 12 பேரை 17 மணி நேரம் பிடித்து வைத்திருந்த ஹரோன் மோனிஸ் என்பவர் அதிரடிப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

16 : பாகிஸ்தானின் பெஷவர் நகரில் இராணுவத்தினர் நடத்தும் பள்ளிக்குள் தலிபான் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 132 குழந்தைகள் உட்பட 148 பேர் கொல்லப்பட்டனர்.

17 : அமெரிக்கா-கியூபா இடையே 18 மாதங்களாக நடைபெற்று வந்த ரகசியப் பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததையடுத்து, இரு நாடுகளும் உறவைப் புதுப்பித்துக் கொண்டன. இதன் மூலம், 50 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வந்த பகைமை உணர்வு முடிவுக்கு வந்தது.



# மற்றொரு 'மம்மி'

ஒருவர் மரணமடைந்தால் அது கொலையா, தற்கொலையா என்பதை நூற்றாண்டுகள் பல கடந்தாலும் கண்டுபிடித்து விடலாம் என்பதை சமீபத்தில் நிரூபித்துள்ளனர். 4,000 ஆண்டுகளுக்கு முன் மரணமடைந்த ஒருவரின் உடல், 2011 இல் அயர்லாந்தில் காஷல் என்ற இடத்தில் கிடைத்தது. சேறும், சகதியும், எண்ணெயும் கலந்த இடம் அது. இங்கு கிடைத்த பழமையான உடலை பரிசோதித்து பார்த்த போது, "அது கொலை செய்யப்பட்ட உடல்..." என்று தெரிய வந்தது. பலரால் மிதித்து, சேற்றுக்குள் புதைந்து போனதும் தெரிய வந்தது. காஷல் பிரதேசத்தில் கிடைத்த இந்த உடலுக்கு, "காஷல் மேன்" என்று பெயர் சூட்டி இருக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். சேறுடன், கறுப்பு எண்ணெயும் கலந்து இருந்ததால் தான், இத்தனை நூற்றாண்டுகள் ஆகியும் உடல் முழுவதுமாக அழியவில்லை.

# ஷங்கரை புகழும் ராம்கோபால் வர்மா!

இந்திய இயக்குநர்கள் ஒவ்வொரும் ஏன் நம் எல்லைகளை நாம் இன்னும் விரிவுபடுத்தவில்லை என யோசிக்க வைக்கும் திரைப்படமாக ஷங்கரின் "ஐ" இருக்கும்.

இந்தியப் படங்களை ஹொலிவுட் கவனிக்க "ஐ" ஒரு காரணமாக இருக்கும். நம் கவனத்தைக் கவரும், மின்சாரம் பாய்ந்ததைப் போல உற்சாகமூட்டும் வகையில், ரஜினிகாந்தைவிட ஷங்கர் உயர்ந்து நிற்கிறார். ஷங்கர் அடுத்து ஆமிர் கானுடன் இணையும் திரைப்படம், இந்தியாவின் "அவதார்" ஆக இருக்கும்.

"ஐ" படத்தின் முதல் நாள் வசூல், லிங்காவின் வசூலை முந்தும் என்பது என் கணிப்பு. பெரிய பெரிய இயக்குநர்கள் எல்லாம் ஷாருக் கான், சல்மா, ஆமிர் கான் போன்ற நட்சத்திரங்களை நம்பி இருக்கையில், ஷங்கர் அந்த நட்சத்திர அந்தஸ்தை உடைத்தெறிந்துள்ளார். அதுதான் அவரது சக்தி.

ஷங்கர், எனக்கு உங்கள் ட்விட்டர் முகவரி தெரியாது, ஆனால் உங்களிடம் ஒன்று சொல்ல நினைக்கிறேன். தற்போது ஒட்டு மொத்த இந்தியத் திரையுலகில் இருக்கும் ஒரே ஒரு முன்னோடி நீங்கள் தான். ஆகச் சிறந்த கற்பனை, அடர்த்தி, அசலான பார்வை என்ற வகையில் "ஐ" ஒரு முன்மாதிரியாக இருக்கும்.



"ஐ" ட்ரெய்லரை பார்த்த பின் பொதுமக்களில் ஒருவனாக எனக்கு தோன்றுவது, தமிழகத்தில் ஜெயலலிதா, ரஜினிகாந்தைவிட ஷங்கர்தான் பெரிய ஆள் என்பதே"


(இயக்குநர் ராம்கோபால் வர்மா தனது ட்விட்டர் தளத்தில்)

# வீட்டு முற்றத்தில் விண்வெளி நிலையம்!

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து 1998 ஆம் ஆண்டு ஒரு செயற்கைக் கோளை விண்ணில் ஏவின. அந்தச் செயற்கைக்கோள் சர்வதேச விண்வெளி நிலையமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

பூமியில் இருந்து 340 கி.மீ. தொலைவில் உள்ள சுற்றுவட்டத்தில் இந்த விண்வெளி நிலையம் சுற்றிக் கொண்டிருக்கிறது. எடை 1 இலட்சம் கிலோவுக்கு, 10 ஆயிரம் கிலோ குறைவு.

எந்தத் தொலைநோக்கியின் உதவியுமில்லாமல் இந்த விண்வெளிநிலையத்தை 15 நாட்களுக்கு ஒரு முறை உங்கள் வீட்டு முற்றத்திலிருந்தே வானத்தில் உங்களால் பார்க்க முடியும். ஒரு சிறிய விமான வடிவில் அது உங்களுக்குத் தெரியும்.



உங்கள் வீட்டுக்கு அருகே எப்போது அது வரும் என்பதைத் தெரிந்து கொள்ள இப்போது எஸ்எம்எஸ் சேவை ஒன்றை நாசா அறிமுகம் செய்துள்ளது. இந்தச் சேவையைப் பெற நாசாவின் இணையத்தளமான http://spotthestation.nasa.gov/ இல் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படி பதிவு செய்து கொண்டால், உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இந்த நேரத்தில் சர்வதேச விண்வெளி நிலையம் வரப் போகிறது என்ற தகவல் எஸ்எம்எஸ் மூலம் உங்கள் செல்போனுக்கு வந்துவிடும். முயற்சி செய்து பாருங்களேன்!





# ஒரு பெண்ணைத் தேடி

- சங்கரபாண்டியன் -

ஆப்கன் பெண் (Afghan Girl) என்று பெயரிடப்பட்ட இப்பெண்ணின் புகைப்படம் ஜூன் 1985ஆம் ஆண்டின் National Geographic இதழில் அட்டைப்படமாக வெளிவந்தது. இப்படம் 1980-களில் ஆப்கானிஸ்தானின் நிலை மற்றும் உலக முழுவதுமிருக்கும் அகதிகளின் நிலையை வெளிப்படுத்துவதாக அறியப்பட்டது.

இப் புகைப்படத்தை எடுத்தவர் "ஸ்டீவ் மெக்கரி" (Steve Mccurry) என்ற புகைப்படக்காரர்.

Amnesty International சுவரொட்டிகளிலும் கலண்டரிலும் கூட பலமுறை அச்சிடப்பட்ட புகைப்படமாகவும் இப்படம் அமைந்தது.

யார் இந்த ஆப்கன் பெண்? என்னும் இந்தக் கேள்விக்கான பதில் அப்படத்தை எடுத்த "ஸ்டீவ் மெக்கரி"இற்குக் கூடத் தெரியாது. அவர் 1984 டிசம்பரில் ஆப்கன் போரைப் புகைப்படமெடுக்கச் சென்றிருந்தபோது ஆப்கன் மற்றும் பாகிஸ்தானின் எல்லையில் இருந்த ஓர் அகதி முகாமில் இந்தப் பெண்ணைப் பார்த்தார். அப்போது 12 வயதே நிரம்பிய அவளைப் பார்த்தபோது அவளின் கண்களில் இருந்த ஈர்ப்பு அவரைப் படமெடுக்கத் தூண்டி இருக்கிறது. அவளின் அனுமதியோடு சில புகைப்படங்களை எடுத்திருக்கிறார் ஸ்டீவ் அவ்வளவுதான். பெயரைக் கூட கேட்கவில்லை. பின்னர் அப்படம் அட்டைப் படமாக வெளியாகி உலகத்தின் கவனத்தைப் பெற்றபோது கூட, அப்பெண்ணைப் பற்றிய விவரங்கள் தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் அப்படம் உலகம் முழுவதும் பல பத்திரிகைகளில் வெளியாகி அகதிகளின் நிலையை விவரிக்கும் அடையாளமாக (SYMBOL) பயன்படுத்தப்பட்டது.

பலமுறை ஸ்டீவ் அப்பெண்ணைப் பற்றித்தெரிந்து கொள்ள முயன்றபோது அது முடியாமல் போனது. காரணம் ரஷ்ய ராணுவத்தை வெற்றி கொண்ட தலிபான்களின் ஆட்சி ஆப்கனில் நடந்து கொண்டிருந்தது. வெளிநாட்டவர் யாரும் ஆப்கனில் நுழைய முடியாத நிலை. பிறகு 2001 இல் பின்லேடனை பிடிப்பதாகச் சொல்லிக்கொண்டு தலிபான்களின் ஆட்சியை அமெரிக்கர்கள் ஒழித்துக் கட்டியது நாம் அறிந்ததுதான்.

அதன்பிறகு கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்டீவ் மெக்கரி அப்பெண்ணைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்பி அவளைத் தேடி ஆப்கன் சென்றார். அவளை முதன்முதலில் பார்த்த அகதி முகாமிற்குச் சென்றார். அங்கு அவள் இல்லை. அவளைக் கண்டுபிடிப்பது சுலபமாக இல்லை. பல தவறான நபர்கள் அடையாளம் காட்டப்பட்டு பின்பு ஒருவர் மூலம் அவளின் இருப்பிடம் தெரியவந்தது. அவர் 1984 இல் அதே முகாமில் சிறுவனாக இருந்தபோது அவளோடு பழகியவர். ஸ்டீவ் கொண்டுபோன புகைப்படத்தைப் பார்த்து அவரால் அடையாளம் சொல்ல முடிந்தது.

அவள் "டோரா போரா" (Tora Bora) மலைப் பகுதியைச் சேர்ந்தவள் என்பதும் ஆப்கன் மீது சோவியத் ரஷ்யாவின் படையெடுப்பிலிருந்து தப்பித்து அகதியாக வந்தவள் என்பதும் தெரியவந்தது. ஸ்டீவ் அவளைத் தேடி 3 நாள் பயணம் செய்து டோரா போரா சென்றார். அவள் இருந்த கிராமம் 6 மணி நேரம் வாகனத்திலும் பிறகு 3 மணி நேரம் நடையாகவும் செல்லும் தூரத்தில் இருந்தது. அது ஓர் எல்லையோர கிராமம். ஸ்டீவ் அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்து கொண்டுவிட்டார். அது அவள்தான்!

அவளின் பெயர் "ஷர்பாத் குலா" (SHARBAT GULA). பஷ்தூன் பழங்குடியைச் சேர்ந்தவள். 17 ஆண்டுகளுக்கு முன் 12 வயதுச் சிறுமியாக இருந்த அவள் இப்போது 3 பெண் குழந்தைகளுக்குத் தாயாகி இருந்தாள்.

அவளின் புகழ்பெற்ற "ஆப்கன் பெண்" புகைப்படத்தைக் காட்டும்வரை அதை அவள் பார்த்திருக்கவில்லை. அவளின் புகைப்படம் பல கோடி நபர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் அகதிகளுக்கு உதவுவதற்கு தூண்டுகோலாக அவள் இருந்திருக்கிறாள் என்பதையும் கூட அவள் அறிந்திருக்கவில்லை.

6 வயதில் குண்டுகளுக்குத் தம் பெற்றோர்களைப் பலி கொடுத்துவிட்டு தன் சகோதரன் மற்றும் 2 சகோதரிகளோடு உயிர் பிழைக்க பனி மலைகளைக் கடந்து, எல்லை தாண்டி, பாகிஸ்தான் முகாம்களில் அடைக்கலம் அடைந்தவள் அவள். அவளுடைய மூத்த சகோதரனின் பாதுகாப்பில் இருந்திருக்கிறாள். போரின் முடிவுக்குப்பின் நாடு திரும்பி திருமணம் செய்து கொண்டாள். கணவன் பெயர் ரா கமத் குள். சிறு வேலைகள் செய்து பிழைப்பவன்.

அந்தப் பெண்ணின் கணவனிடம் அனுமதி கேட்டு இப்போதைய உருவத்தை ஸ்டீவ் புகைப்படம் எடுத்தார்.

1984 இல் ஸ்டீவ் அந்தப் பெண்ணை எடுத்த புகைப்படம்தான் வாழ்நாளில் அவள் எடுத்துக்கொண்ட முதல் படம். அதன்பிறகு இப்போது ஸ்டீவ் எடுத்த புகைப்படங்கள்தான் அப்பெண்ணின் இரண்டாவதாக எடுத்துக்கொண்ட புகைப்படம்.

அந்தப் பெண்மணிதான் அந்தப் புகழ்பெற்ற ஆப்கன் பெண் என்பதை Pational Geograpic பல வழிகளில் சோதித்துப் பார்த்து அந்தப் பெண்மணிதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டது. National Geograpuic பத்திரிகையின் அட்டைப்படத்தை இப்பெண்மணி மீண்டும் அலங்கரித்தாள். 114 ஆண்டு வரலாற்றில் அப்பத்திரிகையின் அட்டைப்படத்தில் இரண்டாம் முறை இடம்பெறும் முதல் நபர் 'ர்பாத் குளா. இதனைத் தொடர்ந்து ஆப்கானிய பெண் தேடல் (The search for the Afghan girl) என்னும் கட்டுரை மற்றும் ஆவணப்படம் உருவாக்கப்பட்டது.

National Geographic மூலம் நிதி திரட்டப்பட்டு அவளுக்கு உதவும் விதத்திலும் மேலும் ஆப்கன் பெண்களுக்குக் கல்வி கிடைக்கவும் உள்ளூர் நிறுவனங்களின் உதவியுடன் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

"ஆப்கன் பெண்கள் நிதி" (Afghan Girls Fund) என்று பெயரிடப்பட்ட அவ்வமைப்பு பின் 2008-இல் ஆண்பிள்ளைகளுக்கும் உதவும் விதத்தில் மாற்றப்பட்டு ஆப்கன் குழந்தைகள் நிதி (Afghan Childrens Fund) என்னும் பெயரில் இயங்குகிறது.






யாழ்.மாவட்டத்தில் செயற்கை உரப்பாவனை மற்றும் நீர்மாசடைதல் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் துவிச்சக்கர வண்டி பவனி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சுன்னாகம் றோட்டரிக்கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வு காலை 8 மணிக்கு சாவகச்சேரியில் ஆரம்பமாகி தெல்லிப்பளையில் நிறைவடைந்தது. (48)

## வாழ்க்கைத்திறன் பயிற்சி இளைஞர்களுக்கான செயற்றிட்டம்

"வலி.தென்மேற்கில் இளைஞர்களுக்கான வாழ்க்கைத் திறன் பயிற்சி" சண்டிலிப்பாய் பிரதேச செயலக வழிப்படுத்தலில் சேவா லங்கா நிறுவனத்தினால் வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது.

"மீள்குடியேறிய மக்களின் மீளும் திறனைக் கட்டியெழுப்புதல்" எனும் தொனிப்பொருளில் நடைபெறும் 9 மாதகால செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக வலி. தென்மேற்கின் 11 இளைஞர் கழகங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 600 இளைஞர்களுக்கான தலா 30 இளைஞர்கள் கலந்து கொள்ளும் 20 இரு நாள் வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொருத்தப்பாடான தலைப்புகளில் துறைசார் வளவாளர்களால் முன்னெடுக்கப்படும் இப் பயிற்சிகளில் பங்குகொள்ளும் இளைஞர்களிற்கு அடையாளம் காணப்படும் அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதுடன், தெரிவு செய்யப்படும் சுயதொழில் நாடும் இளைஞர்களுக்கான மானியங்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் 5 இற்கு மேற்பட்ட மாவட்டங்களில் இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதுடன் யாழ்ப்பாணத்தில் வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட மாதகல் மேற்கு, மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு, மாரசன்கூடல், பெரியவிளான், இளவாலை, முள்ளானை, சில்லாலை வடக்கு, சில்லாலை தெற்கு, வடலியடைப்பு மற்றும் பண்டத்தரிப்பு ஆகிய 11 கிராமங்கள் இதில் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. இச் செயற்றிட்டத்திற்கு US AID நிறுவனம் நிதி அனுசரணை வழங்குகிறது.(48)

## இ.போ.சபையின் ஒளிவிழாவில் அமைச்சர் டக்ளஸ் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இ.போ.சபையின் யாழ்.சாலை நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒளிவிழாவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சரு மான டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வு வடபிராந்திய இ.போ.சபையின் யாழ்.சாலை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வளமான எதிர்காலம் ஒளிமயமான வாழ்வு இதுவே எமது இலக்கு அந்த இலக்கை நோக்கிப் பயணிக்கும எமது பயணத்திற்கு நீங்களும் பங்காளிகளாக மாற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ்.சாலை முகாமையாளர் குலபாலச்செல்வம், வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் புவி, யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிரியா குண்டலினி யோகா உபதேசம்

(யாழ்.நிருபர்)

பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கமும், ஓம் கிரியா பாபாஜி யோகா ஆரண்யமும் இணைந்து முன்னெடுக்கும் கிரியா குண்டலினி உபதேசம் நாளைமறுதினம் 3 ஆம் திகதியும் காரைநகரில் நடைபெறவுள்ளது.

காரைநகர் புதுறோட் சந்தியில் உள்ள மாணவர் நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் லண்டனிலிருந்து வருகைதரும் ஸ்ரீயோகி ராம்சுந்தர் யோகா உபதேசத்தை வழங்கவுள்ளார். ஸ்ரீ யோகி ராம்சுந்தர் குண்டலினி யோகா பயிற்சியை ஸ்ரீ மகா அவதார் பாபாஜியின் நேரடித்தீட்சை பெற்ற யோகி ராமையாவிடம் முறையாகக் கற்றுக்கொண்டவர். இவர் லண்டனில் நூற்றுக்கணக்கானவர்களுக்கு இக் குண்டலினி யோகா உபதேசத்தை வழங்கி வருகிறார்.

காரைநகர் மக்களுக்கு கிடைத்துள்ள இவ் அரியசந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10)

## மகாத்மா காந்தியின் பெயருடைய வீதிகளின் பெயர் விபரங்கள் திரட்டு

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் பெயரை உடைய வீதிகள் மற்றும் வீதிகளிலுள்ள சிலைகளின் விபரங்கள் சனசமூக நிலையங்கள் வாரியாக திரட்டப்பட்டு வருகின்றன.

இதில் மகாத்மா காந்தி வீதி என பெயரிடப்பட்ட வீதியின் பெயர், சிலை அமைக்கப்பட்ட ஆண்டு, சிலையை செதுக்கியவர் பெயர், அதனை திறந்து வைத்தவர் பெயர் மற்றும் காந்தி தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளது.

இதேபோன்று ஏனைய பெரியார்கள், மகான்களின் விபரங்களையும் உள்ளூராட்சி ஆணையாளர்கள் திரட்டி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (92)

## நிர்வாகத் தெரிவு

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைவர் து.மகேந்திரன், உபதலைவர் மோகனதாஸ், செயலாளர் சி.நிசாகரன், உபசெயலாளர் ம.துபிலன், பொருளாளர் கி.கெங்கேஸ்வன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (51)

## முரசின் இன்றைய பலன்

(31.12.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 16 ஆம் திகதி.
தசமி முற்பகல் 11.75. அச்சுவினி முற்பகல் 08.31.
பூரணயோகம். யம கண்டம் 07.00 - 09.29.
இராகு காலம 12.29 - 01.59 வரை. சுபநேரம 04.59 - 06.20 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நேசம் மிக்கோர் நிழலாக நின்று உதவிக்கரம் நீட்டுவார்கள்.

**ரிஷபம்**
தொடுத்த காரியங்கள் இனிய முடிவினைக் கொண்டுவரும்.

**மிதுனம்**
விரிசலடைந்திருந்த சகோதர உறவு சுமுகமாதல்.

**கடகம்**
பொறுப்பின்றி யாருக்கும் பணம், பொருள் கொடுத்தல் ஆகாது.

**சிம்மம்**
வியாபாரப்போட்டியினால் அயல நிலையங்களுடன் மனஸ்தாபம ஏற்படும்.

**மீனம்**
ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிப்பில் கவனஞ் செலுத்தல்.

**கன்னி**
பயணமுகவரின் சாமர்த்தியத்தினால் வெளியூர் பயணம் வெறறியைத்தரும்.

**கும்பம்**
காதலில் வீசிய சந்தேகம் தீர்ந்து விடல்.

**மகரம்**
புதியனவற்றில் நம்பகத்தன்மையைக் கைவிடவேண்டாம்.

**தனுசு**
அரச ஊழியர்கள் மேலதிகாரிகளுடன் பகைக்க முற்படவேண்டாம்.

**விருச்சிகம்**
செய்தொழிலில் போதிய கவனம் காட்டுங்கள்.

**துலாம்**
தடைப்பட்டிருந்த விவாகத்திற்கு பச்சைக்கொடிகாட்டப்படும்.

# உடைக்கும் நிலையிலுள்ளது வவுனியா கல்வீரன் குளம்



வவுனியா பெரியகோமரசன் குளம் பகுதியில் அமைந்துள்ள கல்வீரன் குளம் உடைக்கும் நிலையில் உள்ளது.

மேற்படி குளத்துக்கருகில் இருந்து வந்த சுமார் 50 வருடங்கள் புழமை வாய்ந்த ஆலமரம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை அடியுடன் சாய்ந்து குளத்தினுள் விழுந்துள்ளது. இதனால் இக்குளம் உடைப்பெடுக்கும் நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக இக்குளம் புனரமைக்கப்படாமல் இருந்தமையை சம்பந்தப்பட்ட திணைக்களம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் கவனத்திற்கு கொண்டுவந்த போதும் இக்குளம் புனரமைப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஏனைய பகுதிகளிலுள்ள குளங்கள் புனரமைக்கப்பட்ட போதும் இக்குளம் புனரமைக்கப்படாமையால் இக்குளம் உடைப்பெடுக்குமாயின் மேற்படி குளப்பகுதிக்கு கீழ் வசிக்கும் 75 இற்கு மேற்பட்ட குடும்பங்கள், விவசாய நிலங்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்க நேரிடும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த அசம்பாவித நிலையை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்காக விவசாயத் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவநிலைய உத்தியோகத்தர்கள் மேற்படி பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

## கலாசார மன்றத்தின் இலக்கியப் பெருவிழா

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் 5 ஆவது மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா நாளை வியாழக கிழமை புதுவருடத்தினத்தன்று பிற்பகல் 03.30 மணியளவில் வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

இக் கலை இலக்கிய விழா வல்வை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் தலைவர் விஸ்வரூபன தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் கலாநிதி மு.சிதம்பரநாதன் (விரிவுரையாளர் நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்), சிறப்பு விருந்தினராக கலாபூஷணம வெ.முதது சாமி, திருமதி அன்ரநெற் சுபாஷினி செபஸ்தியன்ஸ் (நடன ஆசிரியை) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் கலைஞர் கௌரவிப்பும், அதனைத் தொடர்ந்து நெய்தல் மலர் 5 ஆவது இதழ் வெளியீடும் இடம் பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து விருது வழங்கல், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

# மயானங்கள், சேமக்காலைகள் மீள்புனரமைப்பு செய்ய ஏற்பாடு

வடக்கு உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள மயானங்களும், சேமக்காலைகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக உள்ளூராட்சி அமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மயானங்கள் உள்ள இடங்களில் நிலவரை படம், சுற்றுமதில், உறுதிகள் பேணப்பட்டு மயான மண்டபம், எரிகொட்டகை, வீதி, கிணறுகள் என்பன அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பணிப்புரைகளை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஊடாக சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர், செயலாளர் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

2015 ஜனவரியில் இருந்து சகல உள்ளூராட்சி மன்றங்களும் மயானங்களுக்கு முதலில் நிலவரை படம், சுற்றுமதில் அமைத்து பின்னர் மேலதிக அபிவிருத்திகளை முன்னெடுக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான வரைபுகள் விரைவில் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பி கைக்கபடவுள்ளன. (92)

# மாணவர்கள் கௌரவிப்பும் உதவி வழங்கும் நிகழ்வும்



யாழ்ப்பாணம் அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் ஒரு அங்கமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் மாணவர்களுக்கான கௌரவிப்பும், மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.


அரியாலை பிரதேசத்திற்கு உட்பட்ட வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அரியாலை அபிவிருத்திச் சங்க மானது தமது முதலாவது அணி மாணவர்களைக் கௌரவித்தது.

க.பொ.த.உயர்தரத்தில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவித்ததோடு 2015 ஆம் ஆண்டில் கல்வியைத் தொடரவுள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி, அவர்களின் தொடர் கல்விக்கான நிதியையும் ஒதுக்கியது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ் பல்கலைக்கழக வணிக பீடாதிபதி கலாநிதி வேல்நம்பி கலந்து சிறப்பித்தார்.

சிறப்பாக இயங்குகின்ற அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளையும் அதன் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன், செயலாளர் பொ.நடராஜா, பொருளாளர் எஸ்.தனபாலசிங்கம் ஆகியோரையும் உறுப்பினர்களையும் அவர் பாராட்டியுள்ளார்.

# ஆயுர்வேதம்



## பருவைக் கிள்ளக் கூடாது!

ஆணுக்கும் பெண்ணுக்கும் யௌவனம் முதிரும் நாட்களில் உடலில் காணப்படும் சில இயற்கைக் குறிகளில் முகத்தில் பருக்கள் அதிகமாக ஏற்படுவதுவும் ஒன்று.

முகத்திற்கு மென்மையையும், வசீகரத்தையும் அளிக்க உதவும், கொழுப்புக் கோளங்களில் அழற்சி ஏற்பட்டு சிறிய சினப்புகள் லேசான தினவுடன் ஏற்படும் சிறுசிறு முகக்கட்டிகளே பருக்கள் எனப்படும்.

தினவைப் பொறுத்துக்கொண்டு சொறியாமலும், நகங்களால் நெருடாமலும் இருந்தால் முகம் விகாரம் அடையும் நிலை ஏற்படாது. பருக்களை நெருடுவதாலும், அழுத்தித் தேய்ப்பதாலும், பிதுக்குவதாலும் உள்ளே உள்ள வெண்மையான கொழுப்பு வெளியேறி அந்த இடம் வடுவாகி நிலைத்துவிடும்.

ஏதும் செய்யாமல் வெறுமனே விட்டுவிட்டால் அந்த கொழுப்பானது சமநிலை ஏற்று சரியாகிவிடும். அதனால் பருக்களை நெருடாதே என்று பெரியவர்கள் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

முகத்தில் நெய்ப்பு மிக்க ஜீவந்த்யாதி க்ருதம், குங்குமா திலேபம், சந்தனாதி தைலம், கிம்சுகாதி தைலம் முதலியவற்றைத் தடவிக்கொண்டே வர பருக்களின் கடுமை தானே குறைந்துவிடும்.

மேலும், முற்றிய தேங்காயிலிருந்து எடுக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் 120 மில்லி லீற்றர், அதில் புனுகு 5 டெஸி கிராம் அளவு அப்படியே எண்ணெய்யுடன் சேர்த்து ஒரு வாரம் வைத்திருந்து பின்னர் பரு உள்ள இடங்களில் காலை வேளைகளில் தடவி வர பருக்களின் வேதனை குறையும். சுமார் ஒன்றிரண்டு மணி நேரமாவது இதை முகத்தில் தடவி ஊற வைத்துக் கொள்வது நல்லது.

பருவின் அழற்சி குறைந்ததும் முன் குறிப்பிட்ட நெய்ப்புக்கான நெய் மருந்தையோ, தைலத்தையோ முகத்தில் தடவி நகம் படாமல் விரலின் உட்பகுதியால் நன்கு தேய்த்து முகச் சதையைப் பிய்த்துவிடலாம். இதற்கு சந்தனாதி தைலம் மிகவும் சிறந்தது.

செஞ்சந்தனம், அதிமதுரம், விளாமிச்சை வேர், பதிமுகம், அல்லிக்கிழங்கு, ஆலம்விழுது, கொம்பரக்கு, மஞ்சிட்டி, தாமரை கேசரம், மருதாணி இலை, மஞ்சள், மரமஞ்சள், நன்னாரி வேர் போன்ற மூலிகை மருந்துகளைத் தனியாகவோ அல்லது அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தோ பன்னீர் விட்டு அரைத்து முகப்பருக்களின் மீது பூசிவர பருக்கள் விரைவில் வாடி அந்தப் பகுதி சமநிலை ஏற்றுவிடும்.

விபூதி பச்சிலை, சப்ஜா, தொண்ணூத்தி பச்சிலை, திருநீற்றுப்பச்சிலை இப்பெயர்களில் ஒரு செடி தோட்டமுள்ள வீடுகளில் வளரும். இதன் கதிர் நல்ல நறுமணம் தரக்கூடியது. இதன் இலையையோ கதிரையோ நன்கு கசக்கிச் சாற்றை பருக்களின் மேல் அடிக்கடி தடவி வர பருக்களின் வேதனைகள் முற்றிலும் அகலும்.

சந்தன அத்தரும் இதேபோன்ற குணம் தரக்கூடியது தான். கட்டை சந்தனத்தை அரைத்து அரைத்த சூடு ஆறுவதற்கு முன் உடனேயே பருக்களின் மேல் தடவிவிடுவது மிகவும் சிறந்தது.

கடையில் விற்கும் சந்தனவில்லைகளின் மூலப்பொருள் சந்தனக் கட்டையாகத்தான் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. மேலும் அதன் மூலப்பொருள் என்னவென்று சரி வர புரியாததால் அதை முகத்தில் போடுவதும் நல்லதல்ல. கட்டை சந்தனம் தான் மிகவும் உயர்ந்தது.

முகத்தை வறண்டதாகச் செய்யுமளவிற்கு அடிக்கடி சவர்க்காரம் தேய்த்து முகம் கழுவுவது கூடாது.

முகத்தில் பூசிய எண்ணெய்ப் பசையை அகற்ற ஒரு டம்ளர் பச்சைப்பயறு, அரை டம்ளர் காய்ந்த எலுமிச்சம் பழத்தோல், கால் டம்ளர் வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக மையாக அரைத்து ஒரு போத்தலில் காற்று புகாதவாறு அடைத்து வைத்துக் கொள்ளவும். அதிலிருந்து சுமார் நான்கு அல்லது ஐந்து கரண்டி எடுத்து அரிசி வடித்த கஞ்சியுடனோ தயிர்மேல் நிற்கும் தண்ணீருடனோ கலந்து முகத்தில் பூசி எண்ணெய்ப் பிசுக்கை அகற்றிக் கொள்வதனால் பருக்கள் மட்டும் மறைவது மட்டுமின்றி, முகத்தில் உள்ள நெய்ப்பானது நன்கு பாதுகாக்கப்படுவதால் பருக்கள் வராமலும் தடுக்கும். முகத்தின் வசீகரமும் கூடும்.

முகத்தை அடிக்கடி குளிர்ந்த நீர் விட்டுக் கழுவிவிடுவது நல்லது.

உடல் உட்புறச் சூட்டினாலும் முகப்பருக்கள் வருவதற்கு வாய்ப்புகள உள்ளன. அதற்கு திராட்சை, பிஞ்சு கடுக்காய், கருவேப்பிலை இவை மூன்றையும் சம அளவு சேர்த்துக் காய்ச்சிய கஷாயம் சாப்பிட்டு மாதம் ஒருமுறை பேதி செய்துகொள்வது நல்லது.

திக்தகம், மஹாதிக்தகம், சோணிதாம்ருதம், நிம்பாதி, படோல கடுரோஹிண்யாதி போன்ற கஷாய மருந்துகள் மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடவேண்டிய நல்ல கஷாய மருந்துகளாகும்.

# அனர்த்த பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவும் வகையில் முப்படையினரும் களத்தில்

(கொழும்பு)

**கடந்த சில நாட்களாக தொடர்ந்த சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகளில் முப்படையினரும் ஈடுபட்டு வருவதுடன் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள 409 நிவாரண முகாம்களில் படையினர் தமது உதவிகளை வழங்கி வருவதாக இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மைய பணிப்பாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.**



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டில் நிலவுகின்ற சீரற்ற கால நிலை காரணமாக வெள்ளம் மற்றும் மண் சரிவு உட்பட பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் உட்பட முப்படையினரும் ஈடுபடுகின்றனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதி, விசேட குழுவொன்றை அமைத்துள்ளார். முப்படை பிரதானிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயலாளர் உள்ளிட்டவர்களை கொண்டே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 146 முகாம்களும் வன்னியில் 87 முகாம்களும் கிளிநொச்சியில் 13முகாம்களும் மத்திய மாகாணத்தில் 105 முகாம்களும் மேல் மாகாணத்தில் 58 முகாம்க ளும் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு தங்கியிருப்போருக்கு இராணுவத்தினர் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் நடவடிக்கைகளில் விசேடமாக கடற்படையினர் மிகவும் சிறப்பாக தமது ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

இயற்கை அனர்த்தத்தின் போது காணாமற்போன 304 பேரை கடற்படையினர் மாத்திரம் மீட்டுள்ளனர். இந்தப் பணிகளுக்காக 29 கடற்படை குழுக்களும் 64 படகுகளும் பயன்படுத்தப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு விமானப்படையினரும் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பிரதான நிவாரண முகாம்களுக்கு கிடைக்கும் நிவாரண பொருட்களைவிட உள்ளூர் பகுதிகளில் உள்ள நிவாரண முகாம்களுக்கு கிடைக்கப்பெறும் நிவாரணப் பொருட்கள் குறைவாகவே உள்ளன. எனவே நிவாரண உதவிகளை வழங்கும் பொது மகக்ள் உள்ளூரில் உள்ள முகாமகளுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்க முன்வரவேண்டும்.

இதே வேளை, உதவிகளை வழங்குவதற்காக கூடுதலானோர் நிவாரண முகாம்களுக்கு செல்வதனால் சில பிரதேசங்களில் வாகனங்களில் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால், நிவாரண முகாம்களுக்கு பொறுப்பாக உளள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டால் அதற்கான வசதிகளை படையினர் செய்து கொடுக்க தயாராக உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை நிவாரண உதவிகள் தேவைப்படும் மக்கள் தமக்கு அறியத்தந்தால் அந்தப் பகுதிகளில் முகாம்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க இராணுவத்தினர் தயாராக உள்ளனர் என்றார்.

## அவசர தொலைபேசி இலக்கங்களும் அறிவிப்பு

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்களில் உதவிகளை வழங்குவதற்கு அந்த முகாம்களுக்கு பொறுப்பான அதிகாரிகளுடன் பொது மக்கள் தொடர்பு கொள்ள முடியும்.

லெப்.கேணல் ரவிந்திர மகாவிட்ட மின்னேரிய -0765303515 மேஜர் உபுல் பண்டார திருகோணமலை 0773049878. 0263266266 லெப்.கேர்ணல் ரோனி பெர்ணான்டோ புணானை - 0771916387, 0273278973லெப். கேணல் ஹரிண் வீரசிங்க - அம்பாறை 0775371151, 011309 0718 கேணல் சந்திர பண்டார - அநுராதபுரம் - 0766907226 லெப்.கேணல் எ. இலங்க கோண்- பதுளை - 077800470 மேஜர் துஷார குசும்சிரி சிலாபம் - 0718470933மேஜர் சம்பத் நல்லபெரும குருநாகலை 0773487588 லெப்.கேணல் சனத் ஜயசூரிய - இரணைமடு 0765303526

# மண்சரிவு அனர்த்தத்தை முன்கூட்டி அறியும் இயந்திரம்

## கண்டுபிடித்தார் பதுளைவாசி

(கொழும்பு)

மண் சரிவு அனர்த்தம் ஏற்படும் வேளை, அதுபற்றி முன் கூட்டியே அறிந்து கொள்ளும் வகையிலான சமிக்ஞை இயந்திர மொன்றை பதுளையைச் சேர்ந்த ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

பதுளை - போகாமடித்த என்ற இடத்தைச் சேர்ந்த பாலித்த ஹேமந்த என்ற நபரே, மேற்படி சமிக்ஞை இயந்திரத்தை கண்டு பிடித்தவராவார்.

இந்த இயந்திரம் பதுளையைச் சேர்ந்த யெலவட்டன் தோட்டத்தின் ஒரு பகுதியில் பொருத்தப்பட்டதும், அப்பிரதேசம் மண்சரிவுக்குள்ளாகும் பிரதேசமென்று, அவ் இயந்திரம் சமிக்ஞையை நாத ஒலி மூலம் காட்டியுள்ளது.

இவ் இயந்திரம் பரீட்சார்த்த ரீதியிலேயே, மேற்படி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருக் கின்றது.

ஆனால், ஏற்கனவே மண் ஆய்வுப் பிரிவினர் மூலமும் இத் தோட்டப் பிரிவு மண்சரிவுப் பிரதேசமென்று இனம் காணப்பட்டிருக்கின்றது.

இத் தோட்டப் பிரிவிலிருந்து 34 குடும்பங்களை வெளியேறுமாறு, அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் உத்தரவிட்டிருந்த போதிலும், அம் மக்கள் அப்பகுதியை விட்டு வெளியேறாமல் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எதிரணி ஆட்சியைப் பிடித்தால் வெளிநாடுகளிலுள்ள புலிகள் கைது

## சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் கையில் தான் இரத்தக்கறை இருப்பதாகவும், போர் வீரர்களைத் தாம் பாதுகாப்போம் என்றும் தெரிவித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலர் சம்பிக்க ரணவக்க.

விடுதலைப் புலிகளின் எச்சமாக இருப்போருடன், அரசாங்கம் தொடர்பு களை வைத்திருக்கிறது.

புதிய ஜனநாயக மு... அதிகாரத்துக்கு வந்ததும் எல்லா விடுதலைப் புலிகளையு... கைது செய்து அவர்களை ... தும்.

புலிகளின் தலை... கப் ...றுப்பேற்ற குமரன் ...த்ம ...ன கிளிநொச்சியில் ...செயற் அனுமதித்துள்ளது அரசாங் ...ராம், நகுலன் போன்ற ...வர்கள் மட்டக்களப்பில் இயங்கு கின்றனர்.

உலகத் தமிழர் பேரவையும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் இயங்குவதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளது.

எதிரணி ஆட்சியைப் பிடித்தால், வெளிநாடுகளில் உள்ள புலிகளின் நிதி, கப்பல்கள் உள்ளிட்ட சொத்துக்களையும், கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

எங்களுடன் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எவரும இல்லை. அரசாங்கம் தனது கைகளில் இரத்தக்கறையை கொண்டுள்ளது. நாம் படையினரைப் பாதுகாப்போம்.

மகிந்த சிந்தனை ஒரு வெற்று ஆவணம். நாட்டின் ஒருமைப்பாட்டின் மீது கைவைக்க எவரையும் நாம் அனுமதியோம்.

2005 ஆம் ஆண்டு மகிந்த சிந்தனையில், தீர்வு குறித்து பிரபாகரனுடன் தான் பேசுவேன் என்று மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார்.

தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தான எதையும் நாம் செய்ய மாட்டோம்.

மீள்குடியேற்றத்தை செய்து, சட்டவிரோத நில அபகரிப்பை தடுத்து நிறுத்துவோம். நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவுக்கு வெளிநாட்டு நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

போர்க்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக தண்டனை விதிக்க அவர்களால் பரிந்துரை செய்ய முடியும்.

இதனைத் தொடக்கி வைத்தவர் ராஜபக்ச தான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கலைஞர்கள் மீதான தாக்குதல் இனம்காணப்பட்டனர் சூத்திரதாரிகள்



கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

குருணாகல் கும்புக்கெட்ட என்னும் இடத்தில் வைத்து நேற்று முன்தினம் கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இளம் கலைஞர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

புதிய தலைமுறைக் கலைஞர்கள் என்ற அமைப்பின் கலைஞர்கள் தாக்கப்பட்டிருந்தனர். பிரபல இளம் நடிகை சமனலி பொன்சேகா, இந்திரசாபா மனுவீர,லக்ஸ்மன் செனவிரட்ன உள்ளிட்ட கலைஞர்கள் தாக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதானதாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தால் பாதிப்பு விவசாயிகளுக்கு இழப்பீடு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நடவடிக்கைகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவிததுள்ளது.

விவசாய காப்புறுதி சபையுடன் இணைந்து இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளத்தால் 910 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.புத்தளம், பொலன்னறுவ, அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள சுமார் 87 சிறுகுளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக விவசாய திணைக் களத்தின் ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையை விட்டு நகர்கிறது தாழமுக்கம்

## காலநிலை சீரடைய வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கு கரையோரத்தை அண்மித்த வளிமண்டலத்தில் நிலவிய தாழமுக்கம் வடக்கு நோக்கி, இலங்கைத் தீவைவிட்டு நகர்ந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் எதிர்வரும் சில நாட்களில் காலநிலை சீரடையும் என்றும் மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிற்பகல் அல்லது மாலை வேளை களில் அவ்வப்போது மழை பெய்யுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கிழக்கு உள்ளிட்ட சில பகுதிகளில் வெள்ள நீர் வழிந்தோட ஆரம்பித்துள்ளது. எனினும் நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களின் வான்கதவுகள் திறநதுவிடப்பட்டமையால் தொடர்ந்தும் சில இடங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது

31. நான்கு பக்கமும் வரம்பு
நடுவே நெல்லின் தாள்கள்
தூங்கி நிற்கும் கதிர்கள் - மயில்
தோகை போல தம்பி

இப்பாடலில் வர்ணிக்கப்படுவது.
1) காலைக்காட்சி
2) வயற்காட்சி
3) கடற்கரைக்காட்சி

32. மணிக்கு 60km மாறா வேகத்தில் செல்லும் புகையிரதம் 80km தூரம் செல்ல எவ்வளவு நேரம் எடுக்கும்
1) 1 மணி 15 நிமிடம் 2) 1 மணி 40 நிமிடம் 3) 1 மணி 20 நிமிடம்

❖ **33-35 வரையான வினாக்களுக்கு பின்வரும் உரைப்பகுதியில் உருவம் காட்டப்பட்டுள்ள இடத்திற்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.**

ஒருநாள்  காட்டின் வழியாக கொடிய பசிக்களைப்புடன் சென்று கொண்டிருந்தது. சிங்கம் மிகுந்த பசியுடன் செல்வதை மரத்தின் மீதிருந்த  பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது சற்றுத் தொலைவில்  கூட்டம் கூட்டமாக குளத்தில் நீர் அருந்திக் கொண்டிருப்பதை கண்ட சிங்கம் அவற்றை இரையாக்குவதற்கு எண்ணியது.

33.  உருவிற்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.
1) ஓர்சிங்கம் 2) ஒருசிங்கம் 3) சிங்கத்தை

34.  உருவிற்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.
1) ஓர்ஆந்தை 2) ஒருஆந்தை 3) ஆந்தையை


35.  உருவிற்கு பொருத்தமான சொல் எது?
1) மான்களை 2) ஒருமான் 3) மான்கள்

**விழா ஒன்றில் ஆண், பெண், சிறுவர்கள் என 84 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் சிறுவர்களின் இரு மடங்கு ஆண்களும், ஆண்களின் இரு மடங்கு பெண்களும் கலந்து கொண்டனர்.**

36. இவ்விழாவில் கலந்து கொண்ட பெண்கள் எத்தனை பேர்?
1) 40பேர் 2) 36பேர் 3) 48பேர்

37. இவ்விழாவில் கலந்து கொண்ட சிறுவர்கள் எத்தனை பேர்?
1) 12 பேர் 2) 15 பேர் 3) 9பேர்

38. 48 ☐ 3 = 4 ☐ 4 கணிதச்செய்கையின் படி வெற்றிடத்திற்கு வரவேண்டிய கணிதச்செய்கை குறியீடுகள் யாவை?
1). கூட்டல், பெருக்கல் 2) கழித்தல், பெருக்கல் 3) வகுத்தல், பெருக்கல்

39. சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு ஒரு சதுர cm எனின் நிழற்றிய உருவின் பரப்பளவு யாது?

1) 6சதுரcm 2) 4சதுரcm 3) 5சதுரcm

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(1).II (2).III (3).II (4).I (5).III (6).II (7).III (8).III (9).II (10).II
(11).I (12).II (13).III (14).III (15).III (16).I (17).III (18).II



**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015**

பகுதி - I
1.30 மணி




# கல்வி முரசு



❖.1 **தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. அறிவாளிகள் எப்பொழுதும் அமைதியாக இருப்பார்கள். என்ற பொருள் தரும் பழமொழி எது?
1) கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்.
2) கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்.
3) குறைகுடம் தளம்பும் நிறைகுடம் தளம்பாது




02. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா? என்ற பழமொழியின் கருத்து யாது?
1) கைப்புண்ணைப் பார்ப்பதற்கு கண்ணாடி தேவையில்லை.
2) ஒளிவு மறைவில்லாத விடயத்தை அறிய உதவி தேவையில்லை.
3) கையில் ஏற்படும் புண்ணுக்கு கண்ணாடி மருந்தல்ல.

03. சம அளவிலான 12 விளிம்புகளை கொண்டு அமைக்கப்பட்ட திண்ம வடிவம் எது?
1)  2)  3) 


04. இலங்கை நாடு எம் நாடு என்பதை குறிக்கும் இரகசிய இலக்கம் யாது?
1) 5323 2) 6523 3) 7427

05. 5 வருடங்களுக்கு முன் கரனின் வயது விமலின் வயதின் இரு மடங்காக இருந்தது. தற்போது கரனின் வயது 23 வருடங்களாகும். தற்போது விமலின் வயது யாது?
1) 12 2) 9 3) 14

06. தேவியிடம் 2ரூபா நாணயங்களும்,5ரூபா நாணயங்களும் மட்டுமே உள்ளன. அவளிடம் 2ரூபா நாணயங்களும், 5ரூபா நாணயங்களும், சமமான எண்ணிக்கையில் உள்ளன. அவளிடம் உள்ள 2ரூபா நாணயங்களின் பெறுமதி 68 ரூபா எனின், அவளிடம் உள்ள மொத்த பணத்தொகை யாது?
1) 170ரூபா 2) 196ரூபா 3) 238ரூபா


07. நான்கு உருக்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. வேறுபடும் உருவின் கீழ் கோடிடுக.
1)  2)  3)  4) 

08. இரண்டெழுத்து பறவை இது
இங்கு அமைதிப் பறவை இது
மிரண்டெழுந்து பறக்கும் போது
மின்னலெனப் பறக்கும் இது

விடுதையில் கூறப்படும் பறவை எது?
1)  2)  3) 

09. மனிதர்களிடம் எப்போதும் இருக்க வேண்டியது
1) நல்லொழுக்கம், அன்பு 2) இரக்கம், பிடிவாதம் 3) பண்பாடு, பொறாமை

10. எண் கோலத்தில் -?- இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?




1) 13 2) 18 3) 12

11. 


| SPV | APK |
|---|---|
| + VPV | + KSS |
| 586 | 123 |

A + P இன் பெறுமானம் யாது?

1) 10 2) 13 3) 11

12. காலையில் மலர்ந்த ஆம்பல் மலர்கள் குளத்தை அழகுபடுத்தின.
மேலே உள்ள வாக்கியத்தை கருத்துள்ள வாக்கியமாக்க செய்ய வேண்டியது,
1) ஆம்பல் என்பதை மல்லிகை என மாற்றுதல்
2) குளத்தை என்பதை பூங்காவை என மாற்றுதல்
3) ஆம்பல் என்பதை தாமரை என மாற்றுதல்

13. சில உருக்களின் நிறைகள் தரப்பட்டுள்ளன.




இதன் படி  இவ்வுருவின் நிறை யாது?

1) 150g 2) 250g 3) 200g


14. கவி, தேவன், நசீர் ஆகிய மூவரிடமும் 100 மாபிள்கள் இருந்தன கவியிடம் தேவனை விட 2 மாபிள்கள் கூடுதலாக இருந்தன. தேவனிடம் இருந்த மாபிள்கள் நசீரிடம் உள்ள மாபிள்களைப் போல மூன்று மடங்காகும். எனின் நசீரிடம் உள்ள மாபிள்கள் எத்தனை?

1) 14 2) 42 3) 44

15. முதலாம் தவணை விடுமுறை ஏப்ரல் 5ஆம் திகதி முதல் மூடப்பட்டு, 26ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. எனின் பாடசாலை மூடப்பட்ட நாட்கள் எத்தனை?

1) 19 நாட்கள் 2) 20 நாட்கள் 3) 21 நாட்கள்

16. எலி ஒன்று A யில் இருந்து Bஇற்குசென்ற பயணப்பாதை தரப்பட்டுள்ளது. அதன்படி எலி எத்தனை தடவை கிழக்கு நோக்கி பயணித்துள்ளது.




1) 5 2) 6 3) 4


17. யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா வரை சென்ற கடுகதி பேருந்து ஒன்றின் பயண விபரம் தரப்பட்டுள்ளது.

| |
|---|
| பேருந்து புறப்பட்ட நேரம் - மு.ப. 8 மணி 30 நிமிடம் |
| உணவு தரிப்பிடம் வர எடுத்த நேரம் - 2 மணி 30 நிமிடம் |
| உணவிற்கு பேருந்து நிறுத்தப்பட்ட நேரம் - 20 நிமிடம் |
| உணவு தரிப்பிடத்திலிருந்து வவுனியா அடைய எடுத்த நேரம் - 2மணி 15 நிமிடம் |

பேருந்து வவுனியாவை அடைந்த நேரம் யாது?

1) பி.ப. 2 மணி 10 நிமிடம் 2) பி.ப. 1 மணி 35 நிமிடம் 3) பி.ப. 1 மணி 50 நிமிடம்

18. இங்கு Aயினால் காட்டப்படுவது





1) சதுர எண்கள் 2) சொற்கள் 3) எழுத்துக்கள்

19. வெளிநாட்டுக்கு செல்லும் ஒருவரிடம் கட்டாயமாக இருக்க வேண்டியது

1) சாரதி அனுமதிப்பத்திரம் 2) ஆள் அடையாளஅட்டை 3) கடவுச்சீட்டு



20. அடுத்து வரவேண்டிய உருவை தெரிவு செய்க.





21. 5kg அரிசியினதும், 3kg சீனியினதும் மொத்த விலை 660ரூபா ஆகும். 1kg சீனியின் விலை, 1kg அரிசியின் விலையிலும் 20ரூபா கூடியதாகும். எனின் 1kg அரிசியின் விலை யாது?

1) 75.00 2) 95.00 3) 85.00

22. இங்கு காட்டப்பட்டுள்ள மிருகத்திற்கு பொருத்தமான பாதம் காணப்படும் உரு எது?






❖ **23ஆம், 24ஆம் வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய விடையை தெரிவு செய்க.**


23. A - லூயி பாஸ்டர் பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர்
B - எல்லே விளையாட்டில் ஒரு அணியில் 16 பேர் விளையாடுவர்

1) A மட்டும் சரியானது 2) Aஉம், Bஉம் சரியானது 3) Aஉம், Bஉம் பிழையானது

24. A - சுனாமி என்பது சீன மொழிச் சொல்லாகும்.
B - கலாவாவி வவுனியா மாவட்டத்தில் உள்ளது.

1) A மட்டும் சரியானது 2) Aஉம், Bஉம் சரியானது 3) Aஉம், Bஉம் பிழையானது

25. உருவின் சுற்றளவு யாது?




1) 34cm 2) 40cm 3) 38cm

26. இன்று இரவு வானில் சந்திரன் தென்படுகின்றது. ஆகவே இன்று பௌர்ணமி நாள் என்பது,

1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

27. நாடா ஒன்று நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டு அதில் ஒரு துண்டு 3 சம துண்டுகளாக வெட்டப்பட்டது ஒரு சிறிய துண்டின் நீளம் 1m எனின் நாடாவின் முழு நீளம் யாது?

1) 9m 2) 12m 3) 6m

28. வட்டவடிவமான விளையாட்டு முற்றத்தை சுற்றி 4m இடைவெளிக்கு ஒன்றாக சமதூர இடைவெளியில் 15 கொடிக்கம்பங்கள் நாட்டப்பட்டன. மைதானத்தின் சுற்றளவு யாது?

1) 60m 2) 56m 3) 64m

29. 30 தோடம்பழங்களில் $\frac{2}{5}$ பங்கு விற்கப்பட்டன எனின் எஞ்சிய தோடம்பழங்கள் எத்தனை?

1) 18 2) 16 3) 15

30. 2014ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி புதன்கிழமை ஆகும். 2014ஆம் ஆண்டில் உள்ள புதன் கிழமைகள் எத்தனை?

1) 53 2) 52 3) 54

# முத்தையன்கட்டு இடதுகரையில் வாழும் 125 குடும்பங்கள் மழையால் இடப்பெயர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன் கட்டு இடதுகரைப்பகுதியில் வாழும் 125 குடும்பங்கள் தொடர்மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் இடம்பெயர்ந்துள்ளதுடன் வாழ்வாதார ரீதியாக பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழையால் இப்பகுதியில் வெள்ள நீர் தேங்கி குடியிருப்புக்களை சூழ்ந்துள்ளதால் தொடர்ந்தும் அங்கு வாழ முடியாது குடும்பங்கள் இடம் பெயர்ந்ததுடன் இவர்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை ஜனாதிபதியின் முல்லை மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம் வழங்கியுள்ளார்.

ஏற்கனவே இக்கிராம மக்கள் வாழ்வாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வரும் நிலையில் இத்தகைய அனர்த்தம் தம்மை வெகுவாக பாதிப்பதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்

மேலும் இக்கிராமத்தின் உள்ளக வீதிகளும் புனரமைக்கப்படாத நிலையில் போக்குவரதது செய்வதில் பெரும் இடை யூறுகளை தாம் எதிர்கொள்வதாகவும் இக்கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (40)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

**தெல்லிப்பளை யூனியன் கல்லூரி**

**கலைப்பிரிவு**

கே.சங்கீதா-3ஏ கு.கீர்த்தனா-3ஏ, எஸ்.பகிர்தா-2ஏ,பி, ந.ஜனார்த்தனி-2ஏ,பி, ந.வனஜா-2ஏ,பி

**வர்த்தகப்பிரிவு**

எஸ்.ஹரிரா-2ஏ,பி, என்.கபில்ராஜ்-2ஏ,பி,பி.சுரேகா-2ஏ,பி, எஸ்.ஜெயப்பிரியா-ஏ,2பி, கே.திரிசாந்தா-ஏ,2பி, ரி.கீர்த்தனா-ஏ,பி,சி,

**கணிதவிஞ்ஞானப்பிரிவு**

எஸ்.யசீகரன்-2பி,சி, எஸ்.துவாரகா-பி,சி,எஸ், கே.கோகுலசாயி-பி,சி,எஸ், தே.ராகுலன்-3சி

**மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை-1**

**விஞ்ஞானப்பிரிவு-**

ஜெறோம் றொசில்ரன் எமில் (2ஏ,பி) [மாவட்ட நிலை-1]

**முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி-1**

**வர்த்தகப்பிரிவு**

தி.தயந்திஜா-3ஏ [மாவட்ட நிலை-1]

**வல்வை மகளிர் மகா வித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

தனுஜா யோகராஜன் - 3 ஏ , வினோஜா நாகேந்திரன் .- 2 பி.சி, மிருஜா சந்திரகுமார் - பி.சி.எஸ், நதியரசி குணபாலசிங்கம் - 3 பி

**கலைப்பிரிவு**

மேரி றொம்சலா சூசைதாஸ் - ஏ.பி.சி, கருணாரட்ணம் மேரி நிஷாந்தினி - 2 ஏ ,பி, காணப்பிரியா ஸ்ரீ.பத்மநாதன் - 2சி,எஸ்

**வல்வை சிதம்பராக் கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

சந்திரலிங்கம் கபிலன் 2ஏ,பி(மாவட்ட நிலை 53),சிவகுமார் ஜெயக்குமார் 2ஏ,பி [மாவட்ட நிலை 60], ரட்ணசிங்கம் மணிமாறன் ஏ.2சி [மாவட்ட நிலை 275]

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

**விஞ்ஞானப்பிரிவு**

ஜோதிகா பிரேமச்சந்திரன் 2ஏ.பி (மாவட்ட நிலை 33), லாவண்யா கனகராசா 2சி.எஸ்

**யாழ் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

தமிழ்நிலா இந்திரதாஸ் ஏ,2பி (மாவட்ட நிலை 80) (17)



**வல்வெட்டித்துறை வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினூடாக மூன்றாம் கட்டமாக வாழ்வாதார உதவி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் திருமதி இந்திரன் கைலாயினி பெண்ணொருவருக்கு உதவி வழங்குவதைக் காணலாம். (116)**

# மார்கழித் திருவெம்பாவை

## இன்று 5ஆம் நாள்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானைப் புகழ்ந்தும் அவருடைய அருட்பெருங்கருணையை வியந்தும் மணிவாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்து அருளிச் செய்யப்பெற்ற தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவல் திருவாசகம்.

அந்த இனிய திருவாசகத்தில் வரும் ஓர் இனிய பகுதிதான் திருவெம்பாவை. அந்த விசேட பதிகமான திருவெம்பாவை பத்து நாட்களுக்கு எல்லா ஆலயங்களிலும் ஓதப்படுகின்றது.

அந்தத் திருவாசகத்தேனின் துளிகளான "திருவெம்பாவை இருபது" பாடல்களையும் அதற்கான பொருள் விளக்கத்துடன் தினம் இரண்டு பாடல்கள் வீதம் "தினமுரசு" வாசகர்களுக்குத் தருகின்றோம். படித்துப் பயன்பெறுக.

**திருவெம்பாவை**

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரழியோம்
உன்னழயார் தான் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்!



**பொருள்விளக்கம்.**

முன்னே தோன்றிய பழைமையான எல்லாப் பொருள்களுக்கும் முற்பட்ட முடியாமுதலே! பழைமையான மூலப் பொருளே! அவ்வாறே பின்னே தோன்றும் புதுமைகளுக்கெல்லாம் புதுமையாக மீண்டும் தோன்றும் தன்மையானவனே உன்னைத் தலைவனாகப் பெற்ற நாங்கள் உன்னுடைய சிறந்த அடியாளர்களானோம்! ஆதலால் உன் அடியார்களின் திருவடிகளை வணங்குவோம்! அங்ஙனமே அவர்களுக்கே உரிமையுடையவர்களாவோம் அவர்களே எங்களுடைய கணவன்மார்களாவர். அவர்க்ள் விரும்பிக் கூறும் முறையிலேயே அடிமையாகப் பணி செய்வோம். எங்களுடைய தனிப் பெருந் தலைவனே! இந்த வகையான வாழ்க்கையையே எங்களுக்கு நீ தருவாயானால் நாங்கள் எந்தக் குறையும் இல்லாதவர்களாக வாழ்வோம். உன்னுடைய அடியார்களுக்கு ஆட்பட்டே சிவனைப்பாடி மகிந்திருப்போம் என்பதாம்.

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனை முழயும் எல்லாப் பொருள் முழவே!
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேத முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதுவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயவலார்
ஓதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!



**பொருள் விளக்கம்.**

சிவவெருமானுடைய திருக்கோவிலைச் சார்ந்து வாழும் குற்றமில்லாத குலத்தில் தோன்றிய கோவிற்பணிப்பெண்களே பாதாளம் ஏழுக்கும் கீழே சொற்களைக் கடந்த எல்லையற்ற இறைவனுடைய திருப்பாதமலர்கள் பூக்களைச் சூடிய அவன் திருமுடி எல்லாப் பொருள்களுக்கும் கீழ்ப்பட மேற்பட்டுள்ளது. அந்த சிவன் உமாதேவியாரை. ஒரு பாகமாய்க் கொண்டவன் ஆகவே அவர் ஒரு திருமேனியை உடையவனல்லன் அவன் வேதங்களுக்கு முதலானவன். விண்ணகத்திலுள்ள தேவர்களுக்கு முதலானவன். விண்ணகத்திலுள்ள தேவர்களும் மண்ணகத்திலுள்ள மாந்தர்களும் எல்லையில்லாத காலமாக எப்படியெல்லாம் பாடிப் பரவிப் புழந்தேத்தினாலும் வரையறைக்குட்படாத புகழமுடியாத உயிர்த்துணைவனாவான். அப்பேர்ப்பட்ட சிவபெருமான் அடியார்களுடைய உள்ளத்தில் இருக்கின்றான் அவனுடைய ஊர் எது? அவனுடைய பெயர் என்ன? அவனுக்கு உறவினர் யார். அயலவர்கள் யார்?. அவனைப் பாடுகின்ற தன்மை எப்படி? அதை எமக்குக் கூறுவீர்களாக. ஒப்புவமை கூற முடியாத இறைவனையே இன்புறப் பாடிப்பணிந்து வாழ்ந்திருப்போம் என்பதாம்.

* * *

*சிவநெறிக் கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன்*

# லங்கா சமசமாஜக் கட்சியின் விசேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலையொட்டி லங்கா சமசமாஜக்கட்சியின் ஒழுங்குபடுத்தலில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலும் இடதுசாரிகளின் நிலைப்பாடும் எனும் கருப்பொருளில் இடதுசாரிகளின் பொதுச் செயலாளர்களும் அமைச்சர்களு மான பேராசிரியர் திஸ்ஸவிதாரண (லங்கா சம சமாஜக் கட்சி) டி.யூ குணசேகரா) (இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி) வாசுதேச நாணயக்காரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கும் இக்கூட்டம் யாழ். நகரில் வேம்படி வீதியில் அமைந்துள்ள றிம்மர மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் அனைத்து ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# தோல்வியில் திரும்புகிறது அமெரிக்கா கூறுகின்றனர் ஆப்கான் தலிபான்கள்



ஆப்கானிஸ்தானில் 13 ஆண்டுகளாக நிலைகொண்டிருந்த நேட்டோ படையினரின் போர்ப் பணிகள் முடிவுக்கு வந்ததைக் குறிக்கும் நிகழ்ச்சி தலைநகர் காபூலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றதைத் தொடர்ந்து, அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படைகள் தோல்வியடைந்து திரும்புவ தாக ஆப்கானிஸ் தானில் இயங்கி வரும் தலிபான் தீவிரவாத அமைப்பு கூறியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில்

ஆப்கானிஸ்தானில் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளிலும், கொடும் செயல்களிலும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஈடுபட்டன.

தற்போது காபூலில் நடந்து முடிந்துள்ள முடிவு விழா, அந்தப் படையினர் தோல்வியடைந்து ஏமாற்றத்துடன் திரும்புவதைத் தெளிவாகக் குறிக்கிறது.

அமெரிக்காவும், அதன் ஆக்கிர மிப்புக் கூட்டாளிகளும், இந்தப் போரில் வீழ்த்தப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 7,000 கட்டடங்கள் அழியும் அபாயம்

## பிரித்தானியாவில் சுற்றுச்சூழல் ஆய்வு



உலகச் செய்திகள்

கடல் நீர்மட்டம் அதிகரிப்பால் பிரித்தானிய கடற்கரைப் பகுதிகளில் வீடுகள் உட்பட சுமார் 7,000 கட்டிடங்கள் வரை கடல் அரிப்பினால் அழிந்துவிடும் ஆபத்து உள்ளதாக சுற்றுச்சூழல் ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சுற்றுச்சூழல் ஆய்வில் கூறியிருப்பதாவது, அடுத்த 20 ஆண்டுகளில் 800 கட்டடங்களை கடல் நீர் முழ்கடித்து விடும். இதனால் இந்த நூற்றாண்டில் சுமார் 1 பில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள சொத்துக்கள் கடலின் ராட்சத அலைகளால் இழுத்து செல்லப்பட்டு பிரித்தானியாவுக்கு இழப்பை தரும். குறிப்பாக கார்ன்வால் (Cornwall) கடற்பகுதி அடுத்த 20 ஆண்டுகளில் 76 வீடுகளை கடல் நீருக்கு இரையாக்கும் என்றும் கிரேட் யார்மவுத் (Great yarmouth) சுமார் 293 வீடுகளையும், சவுதாம்ப்டன் (Southampton) சுமார் 280 வீடுகளையும் இழக்க நேரிடும்.

மேலும் பிரித்தானியாவின் மற்ற கடற்கரைப்பகுதிகளில் சுமார் 295 வீடுகள் அழியலாம் அல்லது வானிலையின் விளைவாக 430 கட்டடங்கள் அழியும் எனக் கூறப்பட்டுள்ளது.

# ஜாவா கடற்பகுதியில் பயணிகளின் சடலங்கள்

## கதறும் உறவுகள்






எயார் ஏசியா விமானத்தில் பயணித்தோரின் சடலங்கள் ஜாவா கடற்பகுதியில் மிதப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தோனேஷியவிலிருந்து 162 பயணிகளுடன் சென்ற ஏசியா QZ8501 விமானம் ஜாவா பெருங் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதை இந்தோனேஷிய அரசு உறுதி செய்துள்ளது.

இந்நிலையில் இந்தோனேஷியாவின் களிமன்தன் தீவுக்கு அருகே விமானத்தின் சிதறிய பாகங்கள் மிதப்பதாக அந்நாட்டு விமான போக்குவரத்துத் துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் தற்போது அங்கு ஏராளமான சடலங்களும் மிதப்பதாகக் கூறப்படுகிறது. இத்தகவலைக் கேள்விப்பட்டு விபத்தில் சிக்கிய விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் கண்ணீரில் ஆழ்ந்துள்ளனர்.

# 10 கோடி கைபேசிகள் இணைப்பு பாகிஸ்தானில் துண்டிப்பு



பாகிஸ்தானில் 14 கோடி சிம் கார்ட்கள் உள்ளன. அவற்றில் 10 சதவீதம் மட்டுமே "போஸ்ட் பெய்ட்" முறையில் உள்ளன. மற்ற அனைத்தும் "பிரீபெய்ட்" திட்டத்தில் உள்ளன. அதை பயன்படுத்தி தீவிரவாதிகள் சட்டவிரோதமாக சிம் கார்ட்டுகளை வாங்கி தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

எனவே, அவர்களின் செயற்பாட்டை தடுக்க சட்ட விரோதமாக சிம்கார்ட்டுகள் விற்பனையை நிறுத்த பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் "பயோமெட்ரிக்" முறையில் ஏற்கனவே புழக்கத்தில் உள்ள சிம்கார்ட்டுகளை சோதனை செய்தும் வருகிறது.

இந்நிலையில் சமீபத்தில் பெஷாவரில் பள்ளியில் நடந்த தாக்குதலுக்கு பயோமெட்ரிக் சோதனை செய்யப்பட்ட சிம்கார்ட்டுகளை தீவிரவாதிகள் பயன்படுத்தியுள்ளனர். எனவே, 28 நாட்களுக்குள் அனைத்து சிம்கார்ட்டுகளையும் சோதனை செய்து உறுதி செய்ய பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் சோதனை செய்ய முடியாததால் சிம்கார்ட்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. இதனால் 10 கோடி செல்போன் இணைப்புகள் துண்டாயின. இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

# எபோலாவால் 7842 பேர் பலி

கொடிய நோயான எபோலா நோய் பாதிக்கப்பட்டதால் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இறந்தவர்கள் எண்ணிக்கை 7 ஆயிரத்து 842 பேர் என அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்க்கு மேற்கு ஆபிரிக்க நாடுகளில் அதிகம் பேர் பலியானதாக உலக சுகாதார மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதில் லைபீரியா, கினியா, ஷியாரா லியோன், ஆகிய நாடுகள் கடும் உயிர்ச்சேதத்திற்கு ஆளாகி இருக்கிறன. கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி வரை 7 ஆயிரத்து 693 ஆக இருந்த உயிர்ப்பலி, தற்போது 7 ஆயிரத்து 842 ஆக உயர்ந்துள்ளது.

# வணிக வளாகத்தில் தீ பாக்.இல் 13 பேர் பலி



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள லாகூரில் நியூ அனார்கலி பகுதியில் அல்கரீம் பிளாசா என்ற வணிக வளாகம் உள்ளது. இங்கு பல கைக்கடிகார கடைகள் உள்ளன. நேற்றுமுன்தினம் மாலை 5.20 மணியளவில் அங்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தொடக்கத்தில் ஒரு கடையில பிடித்த தீ மளமளவென மற்றய கடைகளுக்கும் பரவியது.

தகவல் அறிந்ததும் 12 தீயணைப்பு வண்டிகளும், அவசர உதவிப்பிரிவினரும், மீட்புக் குழுவினரும் அனுப்பப்பட்டனர். உதவிக்காக 6 அம்புலன்சுகளும் அனுப்பப்பட்டன.

இந்த தீ விபத்தில் சிக்கி 13 பேர் உயிருடன் எரிந்து பலியாகினர். 7 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கைக்கடிகார கடைகளில் புதிய பற்றறிகளை பயன்படுத்திய போது அதில் இருந்து வெளியான தீயினால் விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்து நடந்த இடத்தில் 7 பேர் தீயில் கருகியும், புகையினால் மூச்சுத் திணறியும் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மற்ற 6 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர்.

தீ விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பஞ்சாப் முதல் அமைச்சர் ஷாபாஷ் செரீப் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த தீ விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டதுடன், 24 மணி நேரத்தில் அதுகுறித்த விபரங்களை தெரிவிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்

# இராணுவத் தாக்குதல் 100 தீவிரவாதிகள் பலி

நைஜீரியாவின் அண்டை நாடான கமரூனிலும் தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையை அந்நாட்டு இராணுவம் தீவிரப்படுத்தி உள்ளது. இந்த நிலையில் நைஜீரிய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள டோபிள் பகுதியில். நேற்றுமுன்தினம் கமரூன் நாட்டு இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தியது.

இதில் விமானப்படை ஈடுபடுத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகள் 100 இறகும் மேறபட்டோர் கொல்லப்பட்டதாகவும், 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கமரூன் நாட்டு இராணுவம் தெரிவித்து உள்ளது.

இதற்கிடையே மோசோகோ பகுதியில் தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலில் 23 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# நாவற்குழியில் 75 குடும்பங்கள் வெள்ள அனர்த்தத்தால் பாதிப்பு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உதவிகோரமுடிவு

நாவற்குழி அற்புதமாதா தேவாலயம் முன்பாக அமைந்துள்ள ஐந்து வீட்டுத்திட்ட பகுதிக்குள் வாழும் சுமார் 75 குடும்பங்கள் அண்மையில் பெய்த கடும் மழையால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இக்குடும்பங்கள் வதியும் பகுதி வெள்ளம் வடிந்தோட முடியாத மிகவும் தாழ்வான பகுதியாக அமைந்திருப்பதால் இங்குள்ள வீடுகள் யாவும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் இந்த வீடுகளில் வாழ்ந்து வந்த மக்கள் அங்கிருந்து வெளியேறி அயலவர்களின் வீடுகளில் தங்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச சபை உறுப்பினர் இ.டயஸ் இமானுவேல் தெரிவித்தார்.

இந்த வெள்ள நீர் வழிந்தோடுவதற்கான வடிகான் அமைப்பதற்கான ஏற்பாடாக 3மாதங்களுக்கு முன்னர் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் மதிப்பீட்டு அறிக்கையொன்றை தயாரித்து தென்மராட்சி பிரதேச செயலரிடம் கையளித்திருந்ததாகவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக இந்த வடிகான் அமைப்பதற்கான நிதியை பெற ஒழுங்குகள் செய்வதாக பிரதேச செயலர் கூறியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இருந்த போதும் காலக்கிரமத்தில் இந்த நிதி கிடைக்காததால் இம்முறை மழையால் பெரும் சிரமங்களை இந்த மக்கள் எதிர்கொள்ள நேரிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலான கவனத்துக்கு இந்தவிடயத்தை கொண்டுவந்து அவசியமான உதவிகளை முடிந்தவரை விரைவில் இந்த மக்களுக்கு பெற்றுக் கொடுக்க விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (24)

### காணியுற்றவர்...

அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

கட்டைக்காடு கடற்றொழிலாளர் மண்டபத்தில் நேற்று மேற்படி விடயம் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கட்டைக்காட்டு கிராமத்தில் அக் கிராம மக்கள் எதிர்நோக்கிவரும் காணிப்பிரச்சினை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் எமது நோக்கம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளப்புனரமைத்து அபிவிருத்தி செய்வது மட்டுமல்ல. அதற்கும் மேலாக அரசியல் உரிமைகளையும் வென்றெடுப்பதேயாகும்.

இந்நிலையில் எதிர்காலத்தில் எமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்கள் முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் தரும் பட்சத்திலேயே சாத்தியமாகுமென்றும் மேற்படி விடயம் தொடர்பில் விரைவில் தீர்வினை பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் உட்பட அப்பகுதி பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நீதிய[illegible]..

சமை [illegible] ற்றும் துணையிருக்கும் என் [illegible] றுதியளித்துள்ளார்.

இத [illegible] பதிலளித்த அமைச்சர் பீரிஸ், இலங்கையின் அனைத்து வாக்காளர்களும் பங்கேற்கும் வகையில் தேர்தல் நடத்தப்படுவதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், சிறுபான்மையினரும் பயமின்றி வாக்களிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### யார்எதை...

எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு திரட்டும் பிசாரக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். கிட்டு பூங்காவில் நடைபெற்றது.

இதன்போது, உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், கடந்த 49 வருடங்களாக அரசியலில் இருந்து வருகின்றேன். எனது குடும்பம் விவசாயக் குடும்பம். அதனால் விவசாயம் பற்றி எனக்கு நன்றாக தெரியும்.

நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக அமைதியும் சந்தேகமும் முரண்பாடாக உருவாகியுள்ளது. இனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தையும் பகைமையினையும் போக்கி அமைதியான நிலைமையை உருவாக்குவது லேசான காரியம் அல்ல.

பொது மக்களைப் பொறுத்தவரையில், பாரிய பிரச்சினை இருக்கின்றது. இந்த நாட்டில் சமாதானமான ஆட்சி ஏற்படுத்தும் மத மற்றும் மொழிகளுக்கு இடையில் ஐக்கியத்தினை ஏற்படுத்துவதும் அவசியம்.

அன்பு, பாசம் கருணை எம்மத்தியில் இருக்க வேண்டும். இந்த நாட்டில் 100 இலட்சம் மக்கள் இருக்கின்றார்கள். அவர்களில் பலா 3 வேளை சாப்பாடு இல்லாமல் இருக்கின்றார்கள். முதலில் அவர்களின் பசியை போக்க வேண்டும். அதற்கு பின்னர் அபிவிருத்தியை பார்க்க வேண்டும். இந்த நாட்டில் 7 ஜனாதிபதி மாளிகைகள் இருக்கின்றன.

நான் ஜனாதிபதியானால் அதில் ஒன்றுக்கு கூட கால் எடுத்து வைக்க மாட்டேன். இளைஞர்களுக்கு வழங்குவதற்கு 1000 கைக் கடிகாரங்களும், கையடக்கத் தொலைபேசிகளையும் வழங்குவதற்காக மகிந்த ராஜபக்ஷ வரவழைத்துள்ளார்.

அந்த கடிகாரங்களையும், கையடக்கத் தொலைபேசிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள். யார் உங்களுக்கு உதவிகளையும், பொருடகளையும் வழங்குகின்றார்களோ அவர்களிடம் அவை அனைத்தினையும் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் எதிர்வரும் 8 ஆம் திகதி எனக்கு உங்கள் வாக்குகளை வழங்குங்கள் என்றார்.

அப்போது இளைஞர்கள் கூச்சலிட்டு, விசிலடித்து ஆரவாரம் செய்தார்கள். அதேவேளை, தேசிய இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தினை ஏற்படுத்தவுள்ளதாகவும், 49 வருட அரசியல் அனுபவத்தில், இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாகை சூட வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார். தான் யாரையும் பழி வாங்கப் போவதில்லை என்றும் மைத்திரி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, மற்றும் சரத் பொன்சேகா, றிசாட் பதியுதீன் ரவிகருணாநாயக்க, விஜயகலா மகேஸ்வரன் உட்பட பொது எதிரணியின் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (25)

# வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

## மருத்துவசேவை பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் வைத்தியர்களுக்கு அண்மையில் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வை தமக்கும் வழங்க வேண்டும் எனக கோரி தாதியர்களும், சிற்றூழியர்களும் மருத்துவ உதவியாளர்களும், மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பால் நேற்று குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளின் சேவைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டதுடன் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

நேற்றுக்காலை முதல் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் யாழ். போதனாவைத்தியசாலை உட்பட ஆதார வைத்தியசாலைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன. ஏறக்குறைய 80 வீதமான சேவைகள் நேற்று பாதிப்படைந்தமையால் வைத்தியசாலைகளுக்கு வந்த பலரும் சிகிச்சை பெறாமலே திரும்பிச் சென்றனர்.

இதேவேளை மனிதாபிமான அவசர உயிர்காப்புச் சேவைகளுக்கென சில தாதிகள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் யாழ். போதனாவில் மருந்தகம், எக்ஸ்ரே, ஸ்கானிங் போன்ற பிரிவுகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. (இ. 25)

# விவசாயிகளுக்கு நட்டஈடு பூநகரியில் 2500 பேருக்கு நன்மை

பூநகரி பிரதேசத்தில் கடந்த வருட காலபோக நெற்செய்கையின் போது வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நட்ட ஈடுகள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அரச அதிபரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த உதவி வழங்கும் நிகழ்வில் பூநகரி வடக்கு, தெற்கு பகுதிகளையும் சேர்ந்த சுமார் 2500இற்கும் மேற்பட்ட விவசாயிகள் தமக்கான நட்டஈடுகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

பூநகரி வாடியடி கமநல சேவை நிலையத்தில் வைத்து தலா 2500 ரூபா வீதம் வழங்கப்பட்ட இந்த நிவாரண விநியோகத்தில் பூநகரி தெற்கு வலயத்திலிருந்து 711 விவசாயிகளும் வடக்கு வலயத்திலிருந்து 1814 விவசாயிகளும் இந்த நட்ட ஈடுகளை பெற்றுக் கொண்டதாக பூநகரி, மட்டுவில் நாடு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் செ.டேவிற் தெரிவித்தார்.

இம்முறை கடும் மழையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்த விவசாயிகளுக்கு இந்த நட்ட ஈடுகள் கிடைத்துள்ளமை பெரும் உதவியாக அமைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நட்ட ஈடுகளை பெற்றுக் கொள்ள உதவிய இப்பகுதி பெரும்பாக உத்தியோகத்தர், பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்ட செயலர் மற்றும் கமநல அபிவிருத்தி சபைக்கும் பூநகரி விவசாயிகள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.(24)

### 2015-ல்...

வதற்காகவும் நாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ அரசை நிச்சயம் தோற் கடிக்க வேண்டும். இதற்காக அனைத்துத் தமிழ்பேசும் மக்க ளும் தமது வாக்குகளை அன்னப் பறவைச் சின்னத்தில் போட்டியிடும் பொது எதிரணி வேட்பாளர் மைத்ரிபால சிறிசேனவுக்கு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்" என அந்த அறிக்கையில் கூட்டமைப்பு கேட்டுள்ளது.

இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு முன்னான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சித் தலைவர்களின் கூட்டம் கடந்த ஞாயிறு பிற்பகல் கொழும்பிலுள்ள சம்பந்தன் வீட்டில் நடைபெற்றது. ஏன் மைத்திரிபாலவுக்கு ஆதரவளிக்கிறோம் என்று வெளியிடப்படவிருக்கும் ஊடக அறிக்கையில் உள்ள விடயங்களை சம்பந்தன் அங்கு விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கும் மக்கள் எழுச்சியில் நாங்களும் பங்காளிகளாக வேண்டும் என்றும், தனக்குத் தெரிந்தளவில் மைத்திரி மனசாட்சியுள்ள அரசியல்வாதி. அவர் இந்த நாட்டுக்குச் சில நல்ல விஷயங்களைச செய்வார் என்று தான் நம்புவதாகவும் சம்பந்தன் அங்கு தெரிவித்தார்.

கடந்த 60 வருடங்களாக இவர்களை நம்பி ஏமாந்ததுதான் வரலாறு. இப்போதும் தீர்வைப் பற்றிப் பேச மறுக்கிறார்கள். சமஷ்டித் தீர்வை ஏற்றுக கொள்ள மாட்டேன் என்றும், வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றப் போவதில்லை என்றும், நாட்டின் பாதுகாப்புக்காக எடுக்கப்படும் காணிகள் தவிர மற்றவை மக்களிடம் தரப்படும் என்றும்தான் எதிரணித் தலைவரும் கூறுகிறார். இந்நிலையில் எப்படி தமிழ் மக்களை வாக்குப்போடச் சொல்ல முடியும் என்று அங்கிருந்த உறுப்பினர்கள் கூட்டமைப்புத் தலைவரிடம் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

அதற்கு விரிவான பதிலை சம்பந்தன் அளித்திருக்கிறார். சந்திரிகாவிடம் பேசியபோது சில வாக்குறுதிகளை அவர் எனக்குத் தந்திருக்கிறார். எலலாவற்றையும் சொல்ல முடியாது. நான் அவற்றை நம்புகிறேன். எழுத்தில் எந்த ஒப்பந்தமும் இல்லாமல் வாயளவில் தரும் வாக்குறுதிகளை நம்புகிறீர்களா என்று நீங்கள் கேட்டது போலவே சந்திரிகா அம்மையாரும் என்னிடம் கேட்டார்.

எழுதிய ஒப்பந்தங்களெல்லாம் கிழித்தெறியப் பட்டதுதான் வரலாறு. இப்போதைய நிலைமை வேறுமாதிரியானது. கடந்த காலங்களிலிருந்து முற்றாக வித்தியாசமான முறையில் விடயங்களைக் கையாளத் தீர்மானித்திருக்கிறேன். அவ்வாறான ஒரு எண்ணப்பாங்கில் இந்தத் தடவை சந்திரிகா அம்மையார் எனக்குத் தந்த வாக்குறுதிகளை நம்புவதற்குத் தீர்மானித்திருக்கிறேன் என்று சம்பந்தன் கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

ஒருவேளை நமது எதிர்பார்ப்புக்கு மாறாக, மீண்டும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்துவிட்டால் எங்களது நிலைமை என்னாகும் என்று அங்கிருந்த கட்சித் தலைவர் ஒருவர் கேட்டதற்கு, யார் வென்றாலும் 2015-ல் தமிழ்மக்களுக்கான தீர்வு வந்தே தீரும் என்று அழுத்தமாகச் சொல்லியுள்ளார் இரா.சம்பந்தன்.

ஒருவேளை மைத்திரிபால சிறிசேன தோற்று, மகிந்த ராஜபக்ஷ வென்றாலும் எமது அணுகுமுறை முன்புபோல அல்லாது வேறுவிதமாகவே இருக்கும். இதற்குப் பின்னர் முற்றிலுமாக வேறு வழிகளையே நாம் கைக்கொள்ளப் போகிறோம். அதனால் யார் ஜனாதிபதியாக வந்தாலும் அவர் மூலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015-ல் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுகொள்ளும் என்று அழுத்தந்திருத்தமாக அந்தக் கூட்டத்தில் எடுத்துரைத்தார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

# இராணுவத்தை வெளியேற்றுவோம் என்று கோஷமிட்ட கூட்டமைப்பு இப்போது எங்கே?

## ஒரு சிப்பாயைக்கூட வெளியேற்ற முடிந்ததா?





(மாதகல்)

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தாருங்கள் இராணுவத்தை வெளியேற்றுவோம் என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒரு சிப்பாயைக்கூட வடக்கில் இருந்து வெளியேற்ற முடிந்ததா என வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் தவராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையிலிருந்து மாதகல் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதகல் கிழக்கு புக்கைப்பிலோ மகளிர் சங்கம், ஆகியவற்றிற்கு தளபாட உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் தான் நீங்கள் இன்று உங்களுடைய கிராமத்தில் மீள்குடியேறியுள்ளீர்கள். அதேநேரம் அடிப்படை உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகளையும் அமைச்சர் வழங்கியுள்ளார். அதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

1996 ஆம் ஆண்டு சந்திரிக்கா அம்மையார் ஆட்சி அமைத்த போது காணிகளை சுவீகரிப்பதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டது. அதனை இரத்துச் செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த நாம் ஒன்றரை மாதமாக நாடாளுமன்றை பகிஷ்கரிப்புச் செய்தோம். அரசியல் செல்வாக்கு காரணமாக அவ்வர்த்தமானியினை இரத்துச் செய்தனர். அன்று எம்மிடம் அரசியல் பலம் இருந்தது.

இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தாருங்கள் இராணுவத்தை வெளியேற்றுவோம் என்று மக்களுக்கு போலி வாக்குறுதி வழங்கி வாக்கு வேட்டையை பெற்றுக் கொண்டு வடக்கு மாகாண சபையை ஆட்சிபுரியும் கூட்டமைப்பினர் ஒரு சிப்பாயைக்கூட வெளியேற்ற முடிந்ததா?

பழையவற்றைப் பேசி எதுவித பலனும் இல்லை எமது நோக்கம் அபிவிருத்தியை எதிர்நோக்கியதாக இருக்க வேண்டும். யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்த ஐந்து வருடத்திற்குள் பாரிய அபிவிருத்தியை நாம் கண்டுள்ளோம். ஏர் பூட்டி உழுது கொண்டிருந்த கிளிநொச்சி மாவட்டம் இன்று அறிவியல் நகரமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது.

இராணுவம் குடியிருந்த பிரதேசத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தின் இரண்டு முக்கிய பீடங்களான விவசாயபீடம், பொறியியல் பீடம் ஆகியன அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இலகு போக்குவரத்து வசதி, மின்சாரம் என பாரிய அளவிலான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை செய்த தவறினை இனியும் செய்யாது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் சரியாக சிந்தித்துச் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளரும், வலி. தென்மேற்கு பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா), மாதகல் கிழக்கு காந்திஜி முன்பள்ளியின் தலைவர் திரு க.துரைசிங்கம், செயலாளர் ப.சசிகரன், பொருளாளர் திருமதி து.றமணி காந்திஜி முன்பள்ளி ஆசிரியர், மாதகல் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி சு.நிர்மலா செயலாளர் திருமதி க. நிமலராணி மாதகல் கிழக்கு புக்கைப்பிலோ மகளிர் சங்கத் தலைவர் திருமதி அ.புஸ்பராணி செயலாளர் உ.தர்மினி, பொருளாளர் திருமதி எ.அமலபுஸ்பநாயகி மற்றும் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவிலும் மைத்திரி பிரசாரம்

(வவுனியா)

பொது எதிரணியின் தேர்தல் பிரசாரக்கூட்டம் வவுனியா வைரவர் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகியது.

றிசாட் பதியுதீன் தலைமையில் இடம்பெறும் இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பொது எதிரணியின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

மன்னாரில் பொது எதிரணியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுக்காலை மன்னார் தனியார் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

# வடமாகாண உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தமக்கு பாதுகாப்புத் தேவை ஏன்று கோரும் பட்சத்தில் அவர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார் வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.

இதுகுறித்து அவர் வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து மூன்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு யூன் மாதம் மீளப் பெறப்பட்டது.

அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவின் பாதுகாப்பு வழங்கப் பட்டு வந்த எம்.கே.சிவாஜிலிங்கத்தின் பாதுகாப்பும் இத்துடன் வாபஸ் பெறப்பட்டது.

அத்துடன் கடந்த 23ஆம் திகதி வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், என்னுடன் தொடர்பு கொண்டு, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இரண்டு மர்ம நபர்கள் தன்னை வழி மறித்து தங்களுக்கெதிராகப் பேசுவதை நிறுத்தாவிடில் அவரும், அவரது குடும்பத்தினரும் கொலை செய்யப்படுவர் என்று கடுமையாக எச்சரித்தனர் என்று தெரிவித்தார்.

இது குறித்து பருத்தித்துறைப் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்பாக உறுப்பினர் அனந்தி சசிதரனும் கொழும்பில் வைத்து இனந்தெரியாத நபர்கள் தன்னைப் பின் தொடர்ந்தார்கள் என்று கூறியுள்னார்.

இந்த நிகழ்வுகளின் அடிப்படையிலும், கடந்த 16 ஆம் திகதி யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகளின் அடிப்படையிலும் வடக்கு மாகாண சபையின் சகல உறுப்பினர்களுக்கும் அவர்கள் கோரும் பட்சத்தில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கு மாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னார் ஆயருடன் மைத்திரி சந்திப்பு

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபா சிறிசேன மன்னார் ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடியானா அத்துடன் ஆயரின் ஆசியையும் பெற்றுக்கொண்டார்.

குறித்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ர கருணாநாயக, றிசாட் பதியுதீன், காலஞ்சென்ற ஜயலத் ஜயவ னவின் புதல்வரும், அரசியல்வாதியுமான காவிந்த, மன்னார் மாவ குரு முதல்வர் விக்டர் சோசை, ஆயரின் செயலாளர் அருட்பண முரளி உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சிஹல உறுமய இப்போது அரசு பக்ச

(கொழும்பு)

நவ சிஹல உறுமய கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்திய ஒருவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப் போகிறார் என அறிவித்துள்ளார்.

வேட்பாளர் சரத் மன திரா என்பவரே இந்த முடி நேற்று அறிவித்துள்ளார். டைப் பிரிக்க முற்படும் ச களுக்கு எதிராகத் தான் ஜ திபதி மகிந்தவை ஆதரிக் முடிவு செய்துள்ளார் என்று அவர் கூறியுள்ளார்.

# தமிழர்களின் ஆதரவு மகிந்தவுக்கு அதிகம்

## சுப்பிரமணியன் சுவாமி சொல்கிறார்

(சென்னை)

பெரும்பான்மையான தமிழர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக இந்திய பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இந்திய ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழ்ந்து வரும் பெரும்பான்மை இந்து தமிழர்கள் ஜனாதிபதி மகிந்தவை ஆதரிக்கின்றார்கள்.

இலங்கை தமிழ் மக்கள ஜனாதிபதி மகிந்தவை மீளவும் ஜனாதிபதியாக்கினால், அதி காரப் பகிர்வு தொடர்பில் இ திய பிரதமர் நரேந்திர மோ க்கு காத்திரமான பங்களிப் பினை வழங்க முடியும்.

எனவே தமிழ் மக்கள் ஜனா திபதி மகிந்தவிற்கு வாக்களிக்க வேண்டும் என சுப்ரமணியன் சுவாமி கோரியுள்ளார்.

# மின்சாரத்துக்காக ஏங்கும் இரணைமாதா நகர் மக்கள்

தமது கிராமத்துக்கான மின் விநியோக நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக இரணைமாதா நகர் கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிராமத்தின் முன்னோடி அமைப்பாக செயற்படும் இங்குள்ள கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நண்டுகள் பதனிட்டு ஏற்றுமதி செய்யும் பணிகள் நடைபெறுகின்றன. இதன் மூலம் இப்பகுதியை சேர்ந்த சுமார் 70 யுவதிகள் இந்த நண்டு பதனிடும் நிலையத்தில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர்.

மின்பிறப்பாக்கி இயந்திரம் மூலமே இந்த பதனிடும் வேலைகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் மட்டுப்படுத்திய உற்பத்தியே இடம்பெறுவதாகவும் மின் உற்பத்திக்காக கூடுதல் செலவினங்களை எதிர்கொள்வதாகவும் இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

மேலும் எமது கிராமத்தில் வெளியிணைப்பு இயந்திரம் பழுதுபார்க்கும் பயிற்சிகளை நிறைவுசெய்துள்ள 07 இளைஞர்கள் உள்ளனர். மின்சார வசதி இன்மையால் இதற்கான நிலையமொன்றை திறந்து செயலிழந்துள்ள வெளியிணைப்பு இயந்திரங்களை பழுது பார்க்க முடியாதிருப்பதாக திருத்த வேலைகளை மேற்கொள்ளும் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இங்குள்ள 16 வீதிகளில் இன்னும் 7 வீதிகளுக்கு மின் கம்பங்கள் நாட்டவேண்டியு ளன. மிகுதி இணைப்பு வேலை களும் நிறைவடைந்து மின்சா த்தை பெறும் வாய்ப்பு கிடை கும் பட்சத்தில் இங்குள்ள ம வர்கள் தமது இரவு நேர கற்ற செயற்பாடுகளை சீராக னெடுக்கும் வாய்ப்பு கிட்டுமெ அங்கு பணியாற்றும் வாழ்வெ முச்சி திட்ட உத்தியோகத்த அ.கிளாஷன் தெரிவித்தார்.

தொடர்மழை காரணமாக சூரிய சக்தியில் இயங்கும் மின் பிறப்பாக்கி உபகரணங்களு செயலிழந்துள்ளதால் போட்டே பிரதி எடுத்தல், கைத்தொல பேசிகளுக்கு மின்னேற்று போன்ற சிறு தேவைகளுக்கு சுமார் 2கிலோமீற்றர் தூர லுள்ள முழங்காவில் பகுதி செல்லவேண்டி இருப்பதாக இதனால் பொதுமக்கள் பெ சிரமங்களை எதிர்கொள்வ கவும் அவர் மேலும் தெரி தார்.

# அனர்த்தம் பாதித்த பகுதிகளி விசேட வாக்குச் சாவடிகள்

மழைவெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட வாக்காளர்கவு உதவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தே ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். வெ காரணமாக மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடி பகுதிகளில் விசேட வாக்களிப்பு மையங்கள் அமைக்கப் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ள முகாம்களுக்கு அ கிலும் தேவைப்பட்டால் விசேட வாக்களிப்பு மைய்ங்கள் அமைக் படும் என்றும் அவர் தெரிவித்தள்ளார். அத்துடன் தேவைப்பட் பாதுகாப்பு படையினரின் உதவியும் பெறப்படும்.

மோசமான காலநிலை காரணமாக விநியோகிக்கப்பட வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 4 ஆம் திகதி விநியோ பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வாக்காளர்கள் தேவை மிரட் டல்கள் அச்சுறுத் தல்களிற்கு அடிபணியக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.